திராவிடநாடு

11-11-62 | வார வெளியீடு | விலை 10 காசு

நாட்டைக் காப்போம்

—[புலவர் அறன்]—

சிறிதேனும் அச்சமின்றிச் சீனக் காரன்
சினப்புலியின் வாலினையே உருவு கின்றான்
நெறியற்ற முறையினிலே இந்தி யாவில்
நெடும்படையைக் கொண்டுவந்து சண்டை தன்னை
வெறியோடு போடுகின்றான். வேண்டாம் என்று
வேண்டியமட் டும்சொல்லிப் பார்த்தும் அந்தோ!
வெறியோடே இந்தியரை வருத்து கின்றான்.
வீணாக வம்புபல வளர்க்கின் றானே.

பழுத்தபுகழ் பெற்றிருக்கும் பலரும் நாட்டைப்
பாழ்படுத்தும் நிலைமையினைக் கண்டிக் கின்றார்.
இழுக்கதனைத் தேடாதீர் என்கின்றார்! ஆனால்
இமயமலைச் சாரலிலே நடப்ப தென்ன?
முழுச்சண்டை போடுகின்றார்! போரில் சீனர்
முழு ஆர்வம் காட்டுகின்றார்! இழிசெ யலில்
வழுவியந்தோ வீழ்கின்றார்! வாடை போல
வாட்டுகின்றார்! அமைதியினைக் கொல்கின்றாரே

அமைதியினை விரும்புகின்றோம்; ஆனால் சீனர்
அமைதியினை அழிக்கின்றார்! ஆத லாலே
குமைகிறது மக்கள் மனம்! கட்சி பலவும்
கூறிவிட்டன பேருதவி தருக வென்று!
நமைஅழிக்கும் கொடுமையினை விரட்டும் வீரர்
நலம்பெறவே உதவிடுவோம். உலகப் போராய்
அமையாமல் அகன்றிடவே வழிகள் செய்வோம்!
அதுவரைக்கும் துயிலாமல் நாட்டைக் காப்போம்.

"காரணம் யார்?"

[ச. கனகராசன்]

—பழநி—

மன்னர்கள் மக்களின் குறைகாண, வேறுவேடமணிந்து நகரத்து வீதிகளிலும், கிராமத்துப் பகுதிகளிலும், காலை என்றும் மாலை என்றும், நண்பகல் என்றும் நடுநிசி என்றும் பாராது, எந்நேரத்திலும் தனியாகச் சென்று, கண்டு வருவது வழக்கம்!

அதுபோன்று, மன்னன் ஒருவன் மக்களின் குறைகாண, மாறுவேடமணிந்து ஓர் ஊரின் சாலைவழியே சென்றுகொண்டிருந்தான். சாலை வழி சென்ற மன்னனைத் தடுத்து நிறுத்தியது — மென்காற்றில் தவழ்ந்து வந்த மெல்லிய நல்லிசை! அந்நல்லிசையைக் கேட்க மெல்ல அவன் கால்கள்—வீசு தென்றலும் வீங்கின வேனிலும் தவழும் சோலையினுள் சென்றன. சென்ற மன்னனின் கண்கள் இசை கேட்கும் திக்கை நோக்கின, பின் மூட மறுத்தன! காரணம் யாதெனில் நாற்புறமும் மலர்ச் செடிகள் புடைசூழத் தனியான எழில் மேடையில் அமர்ந்து, குயிலினுமினிய குரலால் பாடியது ஓர் பாவை! அந்த பாவை நல்லாள் சாதாரணமானவளா? பார்த்தவர் பரவசமடையும் பைங்கிளி. அந்தக் கன்னியிளங்கொடியைக் 'கண்டவர் விண்டிருக்கமாட்டார்; விண்டவர் கண்டிருக்கமாட்டார்.' அத்தகு பேரழகு!

அந்த அழகுப் பெட்டகத்தின் அழகுகளைக் கண்டு மகிழ்ந்தான்! களங்கமில்லாத முகத்தையும் அதிலே கருவண்டைப்போல் சுழலும் கண்களையும் கண்டு மகிழ்ந்தான்! கொழிக்கும் இளமைபடைத்த கொய்யாக் கன்னமும், கொவ்வை இதழும், அவனைக் கொஞ்ச அழைப்பதாக எண்ணினான்! மயில் சாயலுடைய அந்த மங்கையின் மாதுளை மேனியைக் கண்ட அவன் மருட்சி அடைந்தான்! அந்த எழிலரசியின் தண்டை நிகர்த்த கைகளையும் தளிர் வாழையையொத்த கால்களையும் கண்ட அவன் உள்ளம் தாங்கொணா மகிழ்ச்சி அடைந்தது! அவள்பால் தன் நெஞ்சை அளித்துவிடுகின்றான்! உணர்ச்சி வயப்பட்டு அவளையே உற்று நோக்கினான்!

ஆள் அரவம் கேட்டு அவள் பாடுவதை நிறுத்திவிட்டு, தன்னையே பார்க்கின்ற இளைஞனை எதிர்நோக்கினாள்! அவனது கட்டான உடலையும் கனத்த திண்தோளையும் கண்டு தன்னுள் 'இவன் எனக்குக் கணவனாக மாட்டானா?' என்றெண்ணி உவகைகொண்டனள்! இருவர் கண்களும் கலந்தன! இருவர் உள்ளமும் இருக்கையை மாற்றிக்கொண்டன. உணர்ச்சி உந்த அவளோடு பேசலாம் என்றெண்ணினான், என்றாலும் வெட்கம் அவனைப் பிய்த்துத் தின்றது! அவள் மட்டும் என்ன? 'பேசலாம்' என்றுதான் எண்ணினாள். ஆனாலும் பெண்ணல்லவா? நாணம் அவளை அவ்விடத்தைவிட்டு நகரச் செய்தது! அவள் செல்லும் திக்கையே நோக்கி நடந்தான், அம் மன்னன்.

"இந்த அழகுப் பெட்டகம், நம் அரசியாகி, அரண்மனையை அலங்கரிக்கவேண்டும்" என்றுஅவளையே நினைத்தவாறு அரண்மனைக்குச் சென்றான். உண்ணவும் முடியவில்லை, உறங்கவும் முடியவில்லை. என்ன இருந்தாலும் 'காதல்' நோய் அல்லவா?! அன்றிரவு பூராவும் கண்டவளின் கட்டழகு கண்ணிலே நர்த்தனமாடியவண்ணம் இருந்தது!

இரவு கழிந்து காலையும் வந்தது! அரண்மனை அதிகாரி ஒருவனிடத்தில், அந்த ஆரணங்கின் தந்தையை அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்தான். அவ்வழியே அதிகாரியும் அத்தந்தையை அழைத்து வந்தான்.

அத்தந்தையை அன்போடு உபசரித்து அரிய ஆசனத்தில் அமரச் செய்து, "உம்முடைய மகளை நான், தற்செயலாகக் காண நேர்ந்தது, நல்ல அழகும், குணமும் இன்னபிற நலனும் பெற்றிருப்பதால் நான் அவளை மணம்செய்து கொள்ளலாம் என்றெண்ணினேன். அதற்கு உம்முடைய ஒப்புதலைக் கேட்கவே இங்கு உம்மை அழைத்தேன்." என்றான் மன்னன்.

"என்னுடைய மகளையா மணந்து கொள்ளப் போகிறீர்கள்? உண்மையாகவா மன்னவா?" ஆச்சரியப்பட்டார் என்றாலும், அதிர்ச்சி அடைந்தார், அத் தந்தை. தன்னையும் அரசரையும் ஒப்பிட்டுப் பார்த்தார். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவோ அவ்வளவு! அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் ஆச்சரியப்படுகின்றீர்? உம்முடைய மகள் அரசியாகப் போகிறாள் என்பதற்காகவா?!"

"இல்லை மன்னா இல்லை! எனது மகள் எந்த நலனும் பெற்றிருக்காத போது நான் எப்படி ஒப்புதல் தரமுடியும். எனது மகளைத் தங்களுக்குத் தர முடியாதவனாக இருக்கிறேன். உற்றுக் கேளுங்கள். உணர்ந்து பாருங்கள். தெற்றெனத் தெரியும் பெற்ற மகளை கொற்றவனுக்குக் கொடுக்கலாம் கொள்ளை இன்பம் கொள்ளலாம், என்றாலும், மன்னனின் மனைவியாவதற்கு வேண்டிய தகுதியில்லை எனும்போது யார்தான் என்னசெய்ய முடியும்? பொருத்தம் வேண்டியதில்லையா? அதனால்தான் தரமுடியாது என்கிறேன். மன்னிக்க வேண்டும் மன்னவா."

ஒருகுடிமகன், கேட்டது மன்னன் என்றும் எண்ணாது மறுத்துவிட்டானே என்று நினைத்து ஆத்திரப்பட்டு, அவன் மகள்பால் கொண்ட காதலை முற்றும் பகைமையாக எண்ணினான். அவளை அடைய இனிமேற்கொண்டு செய்யப் போவது 'போர்' ஒன்றே, என்றெண்ணித் தன் கைவேலால் தன் நெற்றியில் வடிந்த வியர்வையைத் துடைத்தான். கண்கள் சிவந்தன. நரம்புகள் முறுக்கேறின. சொல்ல முடியாத சினத்தால் வெகுண்

(4-ம் பக்கம் பார்க்க)

நமது பணி

21] ஆண்டு சந்தா ரூ. 8 (11—11—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 11

நாட்டுக்குப் பொதுவான ஆபத்து ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சமயத்தில், நாடு முழுவதிலுமுள்ள அனைவரும் ஒன்று திரண்டு ஒருமுகமாக நின்று எதிரியை விரட்டியடிப்பதில் தங்கள் முழு ஒத்துழைப்பையும் தர முன்வந்திருப்பதைக் காண பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சீனரின் போர்வாடை, வரவர அதிகமாகி, நாடுபிடிக்கும் வெறியாக மாறிவருகின்றது.

இந்தக் கொடிய போக்கு மிகப்பெரிய ஆபத்தில் கொண்டுவந்து விடுமளவுக்கு நாம் வாளா இருந்துவிடக் கூடாது.

"சமாதானத்தில் ஆர்வமற்றதாகவும், யுத்தம் ஒன்றின் மூலமே பிரச்சினைகள் எதையும் தீர்க்க முடியும் என்றும் நம்பும் எவ்வித பொறுப்பும் அற்ற நாடாகவும் சீனு இருக்கிறது. இது இந்தியாவுக்கு மட்டுமின்றி, இதர உலக நாடுகளுக்கும்ஆபத்தானதாகும்.

இந்தச் சமயத்தில் கம்யூனிச தத்துவம் ஒரு முக்கிய பிரச்சினையாக இருப்பதாக நான் நம்பவில்லை.

இராணுவ மனப்பான்மையும் நாடு பிடிக்கும் வெறியும் கொண்டு ஒரு நாடு வெளிப்படையாகவே இந்தியாவை ஆக்கிரமித்திருக்கிறது என்பதே பிரச்சினையாகும்.

18-வது அல்லது 19-வது நூற்றுண்டின்போது இருந்த திமிர்பிடித்த ஆக்கிரமிப்பைத்தான் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

எனவே, நமது எல்லையில் புதியவிதமான இராணுவ வெறியை எதிர்த்துச் சமாளிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் ஆசியாவே இந்த எதிர்ப்பை எதிர்நோக்கவேண்டி யிருக்கிறது என்பது மட்டுமல்ல; உலகமே இதுபற்றி அனுதாபம் கொண்டிருக்கிறது.

நமது நட்புறவு நாடுகள் நமக்கு உதவிதர முன்வந்தபோதிலும், நாமேதான் இந்தப் பெரும் பொறுப்பை ஏற்றுச் செயலாற்ற வேண்டும்."

என்று பண்டித நேரு அவர்கள் மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

இந்த வீரஞ்செறிந்த வேண்டுகோளுரை நம்மை எல்லாம் மேலும் ஊக்குவிப்பதாகவும், ஒத்துழைப்பை நல்க உற்சாகம் ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இந்த நேரத்தில் பாதுகாப்புத் துறையின் அமைச்சராக இருந்த கிருஷ்ணமேனன், அவர்கள் தம்முடைய பொறுப்பில் இருந்து விலக வேண்டிய நெருக்கடிக்கு ஆளாய்விட்டார்.

மேனன் அவர்களுடைய விலகல் நாட்டிலுள்ள பெரும்பாலாரின் நீண்ட நாள் விருப்பம் என்பது இப்போது தெரியவருகிறது.

சனநாயகப் பண்பைக் கடைப்பிடித்துப் பண்டித நேரு அவர்கள், மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்துப் பாதுகாப்புப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டதானது மேலும் மேலும் மக்களின் ஒத்துழைப்பைப் பெற ஏதுவாக அமைந்துவிட்டதென்றே கூறலாம்.

எனவே, நமக்குள்ளே இருக்கும் சிறு சிறு பூசல்களை ஒரு காரணமாக வைத்துப், பொது எதிரியை விரட்டியடிப்பதில் நம்முடைய ஒத்துழைப்பில்லாத போக்கைக் காட்டிக் கொள்வது பெருந் துரோகமாகும்.

நாட்டிலே உள்ள சிலர்—மிகச் சிலர்—தங்களுடைய தவருன போக்கின் காரணமாகத் தங்களின் ஒத்துழைப்பை நாட்டுக்களிக்க முன் வராது, பாதுகாப்புச் சட்டத்தின்படி கைதாகும் செய்தி கேட்டு நாம் வருத்தமும் அதிர்ச்சியும் அடைகிறோம்.

வீடு தீப்பற்றி எரியும்போது வீணை வாசித்து மகிழும் இந்த ஆகாப் போக்கு நல்லதல்ல. அவர்களின் எதிர் காலத்துக்கும் நல்லதல்ல. நாட்டின் நல்வாழ்வுக்கும் ஏற்றதல்ல என்பதை எடுத்துக்காட்ட வேண்டியவர்களாகின்றோம்.

எனவே, யாருக்காவது ஏதாவது கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றை எல்லாம் மறந்து இந்திய பூபாகத்தை ஆக்கிரமிக்க முனைந்து நிற்கும் சீனச் சிறு மதியினனை புறமுதுகிட்டு ஓடும்படி செய்வது ஒன்றுதான் இன்றைய முதற்பணி—பெரும்பணி—முக்கியமான பணி என்பதை ஒவ்வொருவரும் தமது தூய உள்ளத்தில் ஊன்றச் செய்து வெற்றி வாகை சூடுவோமாக.

2-ம் பக்கத் தொடர்ச்சி

டெழுந்து, "என்ன ஆணவத்தோடு கூறுகிறாய் ஒரு மன்னனிடத்தில் கூறும் பதிலாக இல்லையே! மன்னன் கேட்பதை மறுப்பதுதான் மக்களின் கடமையா? உனது மகளை நீ தந்தால் என்ன? தராவிட்டால் என்ன? போர் செய்தாவது அடைந்தே தீர்வேன்," என்று, கனல் கக்கும் முறையில் சீறினான்.

பெற்றவன், கொற்றவனின் சீற்றம் கண்டு சீறவில்லை. அஞ்சாமல், அயராமல், பதில்மொழி தந்தான். மன்னனும் விடாப்பிடியாகக் கேட்கிறான். பெற்றவனும் மறுக்கிறான். இவர்களது நிலையைக் கண்டார், மருதனிள நாகனார் எனும் புலவர். பொதுவாகப் புலவர்களது மனம் இளகும் தன்மை உடைத்ததல்லவா? அவர்களது நிலையை நினைத்துப் பார்க்கப் புலவரின் மனம் வெதும்பியது. மருதனிள நாகனார் சிந்தனைக்கு இடம் கொடுத்தார். தீர ஆராய்ந்தார். மன்னன் போர் செய்தால் வளமான அந்த ஊர் அழிவது நிச்சயம். அந்த ஊர் அழிந்தால் வறுமை குடிகொண்டு, பஞ்சம் அதிகரிக்கும். பட்டினிப் பட்டாளம் உருவெடுக்கும். மக்களின் வாழ்வு சீரழியும். இதற்கெல்லாம் 'காரணம் யார்?' என்று ஆராய்ந்தார். இந்த ஊர் அழியக் காரணம் 'மன்னர்தானோ?' என்று நினைத்தார். மன்னரும் இல்லை என்று அறிந்து, பின்னர் அத் 'தந்தை தானோ' என்று நினைத்தார். கடைசியாக, இந்த ஊர் அழியக் காரணம் இந்த மன்னனும் அல்ல! அத் தந்தையும் அல்ல! 'இந்த ஊரில் பிறந்த இவளே' என்று முடிவு செய்து,

"மரக்கட்டையைக் கடைந்த வழிப் பிறக்கும் தீ, தான் தோன்றும் மரமே எரிந்து கெடுதற்குக் காரணமாவதுபோல இவள் தான் பிறந்தவூர் கெட்டு வருந்துவதற்குக் காரணமாயினள்" என்னும் பொருளில் ஒரு பாடலைப் பாடினார்.

கருத்தழகும், பொருளழகும் கொண்ட அப்பாடல் இதோ:-

"நுதிவேல் கொண்டு நுதல்வியா
துடையாக்
கடியக் கூறும் வேந்தே தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
அணங்கா யின்டான் பிறந்த வூர்க்கே."

[புறநானூறு 349]

பிரதம மந்திரியின் உத்தரவாதம்

"ஆங்கிலம் ஒரு இணைமொழியாக நீடித்து இருக்கும். இந்தி மொழி புழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும் வரை ஆங்கில மொழியை அகற்றமாட்டேன்."

--ஜவாஹர்லால் நேரு.

DA 62/497

அரசினர் விளம்பரம்.

வீரம் மங்கிவிடாது

அன்றைய தமிழ் நாட்டு வீர வரலாற்று நிகழ்ச்சிகளில் ஒன்றை இக்கட்டுரை விளக்குகின்றது.

இது, இன்றைய நிகழ்ச்சியை நினைவூட்டுகின்றது.

அன்று சோழநாட்டின் எல்லையைத் தாண்டி உள்ளே நுழைய வந்த சிற்றரசன் ஒருவன் அடைந்த பெரு வீழ்ச்சியை, இன்று, இந்திய பூபாக எல்லையைத் தாண்டி இடர் பல விளைக்கும் சிறுமதி படைத்த சீனரும் நிச்சயம் அடைவர் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ள இக்கட்டுரை படித்து இன்புறுவதற்கு மட்டுமன்றி, இளைஞர்களின் உள்ளத்திலே வீரத்தை உண்டாக்குவதாகவும் மிளிர்வதைக் காணலாம்.

சோழநாட்டின் சிறப்பைச் செப்புதற்கு ஓடித்தேடி அலையாமல் 'முத்தொள்ளாயிர'ப் பாடலொன்று கொண்டு, கண்டு, பின், அடுத்தடுத்துச் செல்லவேண்டிய பகுதிகளுக்குச் செல்லுவோம்.

வீதியெங்கும் விழாக்கோலம்! நகரமெங்கும் நன்மணம் பரப்பும் பூக்கள்! கடைகளெங்கும் கண்கவர் வண்ணப் பூமாலைகள்! விதவிதமான வகையிலே தொடுக்கப்பட்டு, தொங்கிக்கொண்டிருக்கின்றன மலர்கள்; காண்போரைக் கவர்ந்திழுக்கும் காந்தம்போல்! அத்தனையும் சோழநாட்டுச் சோலையிலே மலர்ந்த மலர்கள்! மாலையிலே கொய்துவந்து மாலைகட்டி மகிழ்வுடன் விற்பர்; எஞ்சிய பூக்களைக் காலையிலே விற்று மகிழ்வர்; கிள்ளிய மலர்களை அள்ளியெறிவர் சிலர்! அம்மலர்கள்... வானவில்லைப் போல் வண்ணநிறங்காட்டி வளைந்து கிடந்தவாறு காட்சி தருமாம்! இத்துணைச் சிறப்பினுக்குரிய உறந்தையைப்பற்றி உரைக்கின்ற பாடலைக் காணுங்கள்:

மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்

சால மிகுவதோர் தன்மைத்தாய்க்—
காலையே

வில்பயில் வானகம் போலுமே வேல்வளவன்

பொற்பார் உறந்தை அகம்.

உறந்தையின் உயர்வை—சோழநாட்டின் செழிப்பைச் செந்தமிழ்கொண்டு செப்பவந்த நந்தமிழ்க் கோமான் உறந்தையிலே கிடைக்கின்ற பூக்களையும், அவைகள் பயன்படுத்தப்படுகின்ற தன்மையையும் தண்டமிழ்கொண்டு, தண்புனலெனத் தருகின்ற தன்மை போற்றிப் புகழ்தற் குரித்தெனினும், பண்டை நாளில் உறந்தையின் உயர்வை உணர்த்திக் காட்டியுள்ள பாட்டினுல், அன்றிருந்த சிறப்பையும்—செழிப்பையும், வளப்பத்தையும்—விளைவையும் காணுதற்கு நல்லதோர் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென்பதை எவரே மறுத்தற்கியலும்?

நாட்டு எல்லையில் எவனே ஒரு சிறுமதி படைத்தவன் காலூன்றிவிட்டானென்று அறிந்தான்.

செய்தியறிந்தான் செருமுனையே வாழ்வெனக் கொண்ட வளவன்!

எ. கலைமுகிலன்

துடித்தெழுந்தான்! உள்ளம் பட படக்க, நெஞ்சம் வெஞ்சமர்க்குத் தஞ்சமடைய, கண்கள் கனலெனச் சிவக்க, வார்த்தைகள் இடியென முழங்கிவர, நெருப்பென மூச்சு வெளிவர, ஆர்கலியென போர்க் குரல் கொடுக்கின்றான்:

"வீராதி வீரதீர சூரர்காள்! களமெனில் கவின்மிகு காவெனக் களித்துமகிழ் காளைகாள்! உறங்கிடும் வாளுக்கு உணவு தேடிடும் உண்மை வீரர்காள்! இதோ! உணவு தயாராகிவிட்டது! உருவிடுங்கள் வாளை! செருகிவிடுங்கள் செருக்கரின் உடலில்! பனங்காயென உருட்டி விடுங்கள் அவர்தம் தலைகளை! பொன்னி நாட்டு வீரர்தம் திறனறியானுக்கு விளையாடிக் காட்டுங்கள் வீரததை! உணருட்டும் அந்த உலுத்

தர்கள்! உருளட்டும் தலைகள்! புறப் படுங்கள் இன்றே! வெற்றி, இன் றேல் வீரமரணம்! இரண்டில் ஒன்றே போரின் முடிவு!'' என்று வீரமுழக்க மிடுகிறான்.

வெகுண்டவனின் வீரவுரை முடிந் தது! எழுந்தது பெரும்படை யொன்று! ஆர்கலியென அத னிடையே எழுந்தது போர்க்குரல்; எங்கும் முழங்கிக்கொண்டிருந்தது சங்கநாதம்! வாளும், வேலும் தாங்கி, வரிந்துகட்டிப் பொறிபறக்கும் கண் களோடு களம் நோக்கினர் காளை யர்!

காளையர் மட்டுமா களம் நோக்கி நடக்கத் துணிந்தனர்? கிள்ளியின் களிறுகளுக்கு மட்டும் இருக்காதா வீரம்? களிறுகளும் களம் நோக்கிப் புறப்படத் துடித்து அடியெடுத்து வைத்தன!

களிறுகள் கால் எடுத்து வைத்த தன்மை!......அதுதான் அருந்தமிழ் மறவர்தம் வீரத்திற்கும், தீரத்திற்கும் எடுத்துக்காட்டெனில் வியத்தற் கில்லைத்தான்.

அந்தக் களிறுகள்களம் நோக்கிக் காலெடுத்துவைத்த தன்மை, "எங் கள் மன்னவா! சோழ நாட்டுத் தலைவா! இதோ, எங்கள் கால்களில் ஒன்று காஞ்சியில் பாய்ந்துவிட்டது! மற்றொருகால் தரணிபுகழ் தஞ்சை யிலே! தங்கத் தமிழரிடை பொங்கி யெழும் சினத்தையடக்க—சிறுமதி யோர்க்குச் செந்தமிழர் வீரத்தை விளக்கிக்காட்ட ஒருகால் வைத்து விட்டேன்! மீதமுள்ள ஒருகால்!...... தண்புனல்பாய, தழைத்தினியோங் கும் உறைந்தையர்கோனின் உல் லாசபுரியிலே உலாவி வருகிறேன் என்பதைக் காட்ட!'' என்று சொல் லாமல் சொல்லிக்கொண்டிருந்த தாம். இந்தச் சிறப்பை நற்றமிழ் கொண்டு புலவர் பெருமான் நமக்கு விளக்குகின்ற தன்மையினைக் காணுங்கள்:

கச்சி ஒருகால் மிதியா, ஒருகாலால்
தந்துநீர்த் தண்தஞ்சை தான்மிதியாப் —
பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமே, நம்
கோழியர்கோக் கிள்ளி களிறு.

சென்றிடுவீர்! செருக்கடக்கி வந் திடுவீர்!! என்று முழங்கிய பொன்னி வளநாட்டு மன்னவனின் போர்க் குரல் கேட்டுக் கிளர்ந்தெழுந்தயானை கள் அடியெடுத்து வைக்கின்ற போதே காஞ்சியையும், தஞ்சையை யும், ஈழத்தையும், உறந்தையை யும் அடைந்துவிட்டதென விளக்கிக் காட்டியுள்ளது உண்மையிலேயே உவகையூட்டுகின்றதென்பது மட்டு மல்ல; சோழநாட்டு யானைகளுக்கு அமைந்திருந்த வீரத்தையும் விளக்கு வதாக அமைக்கப்பட்டுள்ளது, போற்றுதற்குரியதே.

விண்முட்டும் மாளிகை! அதனைச் சுற்றி அழகுற அமைக்கப்பட்டி ருந்தது கோட்டை. அக்கோட்டை யின் கதவு......இரும்பால் காய்ச்சி உருவாக்கப்பட்டது! அக்கதவைச் சுற்றியும், கதவின் மேற்புறங்களி லும் எதிரிகளின் பலத்தைச் சோதிக்க கூரீட்டிகள் பதிக்கப்பட்டி ருந்தன! இத்தனை பாதுகாப்புடன் அமைந்திருந்த அக்கோட்டை! அக் கோட்டையின் மத்தியிலே பாது காப்பாக இருந்தான், கோலோச்சி, வளவனை வம்புக்கிழுத்த வேந்தன்!

இத்துணை பலமாக, முட்கம்பி களாலும், கூர்வேல்களாலும் ஆக் கப்பட்டு, இரும்புத் திரையோவென எண்ணவைக்கும் கதவுகளைப் பெற்று வலிமையோடு திகழ்ந்த அவ்வரண்மனையைக் களிறுகள் கண்டதுதான் தாமதம்!

விண்முட்டி வியப்பூட்டி நின்ற மாளிகையும், மன்னவனின் அடைக் கலமாய்த் திகழ்ந்து கொண்டிருந்த அவ்வரண்மனையும் யானைகளின் வலிமைக்கு முன்னே சாய்ந்து பட் டொழிந்தனவாம்!

"எங்கள் வளவனைப் போருக் கிழுத்த சிறுமதிபடைத்தோனே! திரண்டெழுந்து வந்த எங்களுக்குப் பதில் சொல்! இதோ பார், உன் கோட்டை கொத்தளங்கள், கொடி மரங்கள் பொடிப் பொடியாகின்றன! அடுத்தோம்கோட்டையை! உடைத் தோம் அவைகளை!'' என்பதுபோல் அம்மதிற் சுவர்களை தூள்தூளாக்கி எறிந்தனவாம் அந்த யானைகள்!

யானைகள் தங்கள் தந்தங்களை மதிற்சுவரில் பாய்ச்சி, சுவரைப் பெயர்த்தெடுத்த அக்காட்சியைக் கண்ணுற்ற புலவர் புனைந்துரைப் பதைப் பாருங்கள்:

"ஓடிவந்தன களிறுகள்; கோடென உயர்ந்த கோட்டைச் சுவர்கள் சரிந்தன; தேடிப் பிடித் திழுத்து அந்நாட்டு வீரர்களைவீழ்ச்சி யுறச் செய்தன; வேலொத்த கதவு கள் இருந்த இடந்தெரியாதாயிற்று; பாய்ந்துற்ற வேகத்தில் மதிற் சுவரைக் குத்தி வானைமுட்டும் அள விலே தூக்கி நிறுத்தின; அக்கதவு களும் தந்தத்தில் அகப்பட்டுவிட் டன; வேலையை முடித்து மீண்டும் பழைய இடத்தை அடைந்தன; அவைகளின் தோற்றம் தண் ணெனும் கடலிலே செல்கின்ற கலத்தையொத்ததாகத் தோன்று கிறது'' என்கிறார்.

அயில்கதவும் பாய்ந்துழக்கி
ஆற்றல்சால் மன்னர்.
எயில் கதவம் கோத்(து)
எடுத்தகோட்டால்—பனிக்கடலுள்
பாய்ந்தோய்ந்த நாவாய்போல்
தோன்றுமே எங்கோமான்
காய்சினவேல் கிள்ளி களிறு.

யானையை ஒரு மரக்கலமாகவும், அதன் உயர்ந்த கையை—துதிக் கையை கூம்பாகவும், துதிக்கை யொடு ஒன்றுபட்டிருந்த கதவைப் பாய்மரமாகவும் வைத்துப் பாடியிருப் பது காணக் களிப்படைவதோடு, வளவன் நாட்டுக் களிற்றினத்தின் வீரத்தையும் அறியக்கிடக்கிற தன்றோ?

[(ப—ரை) எயில் கதவம்-மதிற்சுவ ரொடுகூடிய கதவு; கோர்த்தெடுத்த கோட்டால்-தந்தத்தின் உதவியால் மதிற்கதவை குத்தித் தூக்கியெடுத் ததன்விளைவால்; நாவாய்போல்- கப்பலைப்போல்.]

ஆம். போரென்று பேரொலி கிளப்பி, வருவது வரட்டும் வகை யுடன் ஏற்போமென்றுரைத்தான் சிற்றரசன்; என்ற செய்திகேட்டு, கொட்டியது தேளெனத் துடித்துத் துள்ளியெழுந்தான், கிள்ளி! விளைவு ...விளம்புதற்கியன்றிடுமோ?

துள்ளியெழுந்தவன் கிள்ளி யெனில் புள்ளினங்கூட நில்லாதே இருப்பிடத்தில்! பின் வேற்றரசு மட் டும் வேருடன் வீழாது வாழவா செய்யும்? கிள்ளியின் வரலாற் றைப் புரட்டிப் பார்த்தால்......பாய்ந் தெழுந்தான், படையுடன்; மாண் டொழிந்தான் போருக்கழைத்த புர வலன்! என்றல்லவா கூறுது கூறிக் கொண்டிருக்கிறது! போரெனில் கிள்ளிக்கு 'நிலாச்சோறு' என்றல் லவா கூறுவர்! இவ்வளவு வீரம் பொருந்திய பொருதடக்கை வாள் வீரன் வீணே விட்டுவைப்பானு, எல்லைமாற்ற வந்தவனை!

துள்ளி விளையாடினுன் களத் தில்! ஒல்லை ஒழிந்தான் சிற்றரசன்! அவன்மட்டுமா ஒழிந்தான்? எவர் வரினும் புறங்கொடோம் என்று

ரைத்துப், பருவயிரத்தோள்படைத்துப் பொருதடக்கை வாளெடுத்து சூளு ரைத்துச் சூருவளியெனக் களம் கண்ட கணக்கற்ற காளையர்களும் தலையிழந்தும், கையிழந்தும், காலி ழந்தும், கண்ணிழந்தும்—கொப் பளித்தோடும் குருதியிலே மிதந் தனராம்!

உறுதிதளராது வாள்சுழற்றி, வேல்வீசி நின்று, வீழ்ந்துற்று வீர மரணத்தை மார்போடணைத்துக் கொண்ட மறவர்களின் தலையோடு களை உடைத்து, அவ்வோடுகளிலே மூளையை வைத்து நெய்யாக்கி, சரிந்து வீழ்ந்துகிடந்த குடலைத் திரி யாக்கி எரித்து, வீழ்ந்துகிடந்த பிணக்குவியல்களை — போர்கண்டு கோழையாகாது கொதித்தெழுந்த கோமான்களை — குணக்குன்றுகளை — தளையறுக்கத் திரண்டெழுந்த திண்தோள் வாள் வீரர்களைத் தின்று கொண்டிருந்தனவாம், சிறுநரிக் கும் பல்! அப்பப்பா! எத்துணைக் கொடுமை! எத்துணை விபரீதமான முடிவு!

இவ்வளவு கொடுமையை-பெரும் போரின் விளைவைக் காண்கிறார், கன்னித்தமிழ்ப் புலவரொருவர். புல வரின் உள்ளம் உணர்ச்சியலை களால் உந்தப்பட்டு, வார்த்தைகளை வண்ணக் குழம்பாக்கி, எண்ணத் தமிழாரமாகத் தருவதைப் பாருங்கள்:

“முடியொடு கூடிய மண்டை யோட்டை எடுத்து, மூளையை நெய் யாக்கி, குடலைத் திரியாக்கி—அந்த விளக்கொளியில் வீழ்ந்துபட் டோரின் உடலைத் தின்கின்ற நரி களுக்கு எவ்வளவு களிப்பு!...... எத்துணை இன்பம்!” என்று தன் உள்ளம் வெந்து நொந்து வேதனை தாளாத நிலையிலே கூறுகிறார்! புல வரின் புண்பட்ட உள்ளத்திலிருந்து வந்த வண்ணத் தமிழ்ச் செய்யுளைக் கீழே பாருங்கள்:

முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய்யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—
எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே;
செம்பியன்
சேஎய் பொருத களம்.

புலவரின் புண்பட்ட நெஞ்சத்தி னின்றும் வந்த இப்பாடலைப் படிக் கின்றபோது நமக்கே உள்ளம் வேதனையால் துடிக்கிறதென்றால், உண்மை நிலைமைகளை நேரிலே கண்டு, பாடலாக்கிய பாவாணரின் பண்பட்ட நெஞ்சம் எந்த அளவிற் குப் புண்பட்டிருக்குமென்று எடுத் தெழுத முடியுமோ?

புலவரின் நெஞ்சம் பனியென உருகிய நிலைக்குக் கொண்டுவந்த கிள்ளி, வெற்றி மங்கையை மாண் போடணைத்து மகிழ்ச்சிப் பெருக் குடன் தலைநகர் நோக்கிச் சென்றான்!

களத்திடையே களித்து விளை யாடிய வீரர்களும், விழியாலே மொழிபேசி, களிப்பூட்டும் காளை யரைக்—கடைக்கண் பார்வையிலே காரியத்தைச் சாதிக்கும் காதலி யரை—மலர் மணக்க, மகிழ்ச்சி பூக்க, மன்றலிலே அன்றலர்ந்த மலர்மாலையிட்டு மணம்முடித்து மங்கையரைக் காணக்களித்து மகிழ்ந்த வண்ணம் செல்கின்றனர்!

சென்ற செருகளச்செம்மல்களைச் —செகமஞ்சப்போரிட்டு வந்தவர் களை, முல்லைப்பல் முன்தெரிய, கயல் விழிகள் கவின்பாட, செவ்விதழ்கள் சிரித்து மகிழ “வாருங்கள்! தாருங் கள் தையலெனக்குஇன்பம்! கூறுங் கள் களக்கதையை” என்று வர வேற்று இன்பமுறுகின்றனர் ஏந் திழையர்கள்!

களித்து வந்த காளையர்களைப் போல், களித்திடையிருந்து காதலி யைக் கண்டு களத்துச் செய்திகளை கதை கதையாய் கட்டிவிட்டுப் பெருமைகொள்ள எண்ணிக் கொண்டே வந்தன களிறுகளும்.

காதலியரின் இருப்பிடத்தை வந் தடைந்த களிறுகள் கதவைத் திறந்து சென்று காதலியரைக்காண வெட்கித் தலைதாழ்த்தி வெளிப் புறத்தே நிற்கின்றன. காரணம்? மன்னவனின் முடிபறித்து அடியி லிட்டு இடறிய நேரத்தில், கால் நகம் தேய்ந்தும், கொடிய மதிலை அடித் துக் குத்தித் தகர்ந்தபோது, அத னிடை பட்டு முறிந்துபோன தந்தங் களும்தான் காதலியைக் காண நாணமுறச் செய்தனவாம்!

போருக்குச்செல்லுகையில் முனை முறியாத தந்தத்தையும், தேயாத நகத்தையும் பெற்று, வலிவோடும் பொலிவோடும், எழிலோடும், இயற்கை அழகோடும் காணப்பட்ட களிறுகள், களத்திடையிருந்து வந்தபோது அழகொழிந்து, வலிவும் பொலிவும் நலிந்து, நிலைகுலைந்து வந்திருந்ததை எண்ணிய களிறு கள், அழகிழந்த தங்களைக் காதலி கள் காண மறுத்துவிட்டால் என் செய்வது என்பதுதான் அவை களின் நாணத்திற்குக் காரணமாம்.

எப்படி இருக்கிறது பாருங்கள்! காளையர்கள்தான் காதலியரைக் காணத் துடித்துச் செல்கின்ற போது, சீவிச் சிங்காரித்து, அழகு பார்த்து, ஆடை சரிபார்த்து, முகத்தை மும்முறையோ, நான் முறையே கழுவிக்கொண்டு செல் கின்றனர் என்று கண்டிருக்கின் றோம். ஆனால் சோழநாட்டுக் களிறு களுமல்லவா களத்தினின்று வந்து நிலைகுலைந்த நிலையிலே — வீரவிளை யாட்டால் நிகழ்ந்த தழும்புகளைத் தாங்கிக்கொண்டிருந்தபோதும், அழ கிழந்தோமே, எப்படிக் காண்பது காதலியை என்று எண்ணி நாணிப் புறக்கடை நிற்கின்றனவாம்! என்னே விந்தை!

இந்தக் காட்சியைக் கவின்தமிழ் கொண்டு தண்டமிழ்ப் புலவரொரு வர் தரும் மாட்சியைக் காணுங்கள்:

கொடிமதில் பாய்ந்துற்ற கோடும் அரசர்
முடிஇடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு.

காதலியைக் காண நாணிப் புறக் கடை நின்றன களிறுகள் என்ப தற்குக்காரணமென்னவென்று பார்த் தீர்களா? ஓடிப்பாய்ந்து கோட்டை களைச் சூறையாடிய நேரத்தில் இயற்கையாகக் கொம்பொடிந்தும், முடிபறித்து அடியிலிட்டு இடறிய நேரத்தில் இயற்கையாகவே நகம் தேய்ந்துபோய்விட்டது என்பதற் காகக் களிறுகள் காதலியைக் காண வில்லை; காண நாணினவென்று புலவர் புகல்கின்ற விதம் மிகவும் சுவைபட இருக்கிறதல்லவா?

புலவரின் நெஞ்சத்திலிருந்து விடு பட்டெழுந்த பாட்டினால் உள்ளம் உவகையுறுவது மட்டுமா? சோழ நாட்டுக் களிறுகளின் வீரமும், மானமும், நாணமும் நமக்குத் தெற் றெனத் தெரிகிறதன்றோ?

(9-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாளர்களுக்கு

“திராவிட நாடு” விற்பனையாளர் கள், தங்கள் பட்டியல் பாக்கியை உடனுக்குடன் அனுப்பிவைக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதிக்குள் பட்டியல் பாக்கி அனுப் பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப் பப்படமாட்டாதென்பதைத் தெரி வித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்.



அது ஏன்?

திடீரென்று என்னை மாற்றிவிட்டார்கள். மாற்றப்பட்ட ஊர், முன்பின் தெரியாத இடம். மாற்றல் உத்தரவு வந்ததும் மனத்தில் பெரும் கலக்கம் ஏற்பட்டுவிட்டது. சிறந்த நண்பர்களையும், நல்ல பல வசதிகளையும் விட்டுவிட்டு, முன்பின் தெரியாத ஊருக்குப் போகவேண்டுமே என்ற எண்ணம் உள்ளத்தைக் குடைந்தது. வேலைக்கு முழுக்குப்போட்டு விடலாமா என்று கூட எண்ணியது உள்ளம். வேலையை விட்டுவிட்டால் வாழ வழி வேண்டுமே!

மனத்திற் பெருஞ்சுமை அழுத்த, வேண்டா வெறுப்போடு வண்டி ஏறினேன். புதிய ஊரில் நான் இறங்கிய அன்று சந்தை நாள். எங்கு பார்த்தாலும் கூட்டமும், குழப்பமும், சந்தடியும், நெருக்கடியும் நிறைந்திருந்தன. அலுவல் முறையில் அறிமுகமான நண்பர்கள் சிலர் அங்கே இருந்தனர். அவர்களுடன் உரையாடுவது ஓரளவு அமைதியைத் தந்தது. ஆயினும் கலக்கம் நீங்கினபாடில்லை.

இரண்டு நாட்கள் நத்தைபோல் நகர்ந்தது. மூன்றுவது நாள் அலுவலகத்து மொட்டை மாடியில் அமர்ந்தபடி திறந்தவெளியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். எதிரில் புகைவண்டி நிலையம். சுற்றிலும் சில உயரமான கட்டிடங்கள்; பல தாழ்வான குடிசைகள். தூரத்தில் பெரியதொரு மாளிகை. இன்னும் தொலைவில் அழகான குன்றம் ஒன்று. அதில் தோன்றிய இயற்கை எழிலை ஓரளவு நுகர்ந்தபடி அமர்ந்திருந்தேன். சிந்தைக் குழப்பம் மாறவில்லை; மாளவில்லை. என் பார்வை தானுகவே எதிரிலிருந்த சிறிய வீட்டின்மீது விழுந்தது.

வீட்டு வாயிலில் குளிர் முகம் ஒன்று இமைகொட்டாது என்னைக் கவனித்துக்கொண்டு நின்றது—இல்லை கண்காணித்துக்கொண்டிருந்ததுபோலும்! நான் அங்கே பார்த்ததும், அந்த எழில் வதனம் தன் பார்வையை வேறு எங்கோ செலுத்துவதுபோல் பாவனை செய்தது.

நான் பார்த்தேன். திரும்பப் பார்த்தேன். திரும்பத் திரும்பப் பார்த்தேன். ஏனோ என்றுமில்லாததொரு உணர்ச்சி என் உள்ளத்தை ஆட்கொண்டுவிட்டது. அந்த எழில் வதனம் அடிக்கொருதரம் என்னை ஏறிட்டுப் பார்த்தது. என் பார்வை அங்கே நிலைகுத்திவிட்டதால் அம்மலர் முகம் தன் நோக்கை நிலநோக்கு ஆக்கிக்கொண்டது.

ஆமாம், கண்டதும் காதல். விந்தையான காதல்.

கனகு

பிறகு கேட்கவேண்டுமா! அலுவலகத்தையே என் உறைவிடமாக்கிக்கொண்டேன். வேலை ஓய்ந்த வேளை எல்லாம் நான் அந்த மொட்டை மாடியில் உலவினேன். ஊரைவிட்டு வந்த எண்ணம் என்ன? ஊரின் எண்ணமே என் உள்ளத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு விட்டது.

இரவு வேளைகளில் அங்கே பனி மிகுதி. அந்தப் பனியையும் பொருட்படுத்தாமல் நான் மொட்டை மாடியில் நின்றேன். இப்போது பொழுது நகரவில்லை. விரைந்து பறந்தது.

ஆயினும், அந்த எழிற்பாவையோடு உரையாடும் வாய்ப்பு ஒரு நாளேனும் கிட்டவில்லை. அவள் பார்ப்பாள். நான் பார்ப்பேன். சில வேளை அவள் என்னை ஊடுருவிப் பார்ப்பாள். அப்போது என் ஊனுருகும். உள்ளம் உருகும். உணர்வும் உருகும். நான் அவளைப் பலபல தடவை ஊடுருவப் பார்த்துள்ளேன். பார்த்துக்கொண்டே இருந்துள்ளேன். அது அவளை என்ன செய்திருக்குமோ, நானறியேன்.

மெல்ல மெல்ல எனக்குத் துணிச்சல் பிறந்தது. அவளைப்பற்றி ஓயாது எண்ணிக்கொண்டிருந்த நான் மெல்ல மெல்லப் பேசவே தொடங்கிவிட்டேன். அப்பேச்சு மற்றவர்கள் என்னைப்பற்றி எப்படி எண்ணும்படி செய்ததோ, நானறியேன். எனக்கு அவள் தெவிட்டாத தேன் தமிழாய் இனித்தாள். இடையில் உள்ளூர் வாசிகள் சிலர் நண்பராகக் கிட்டினர். அவளைப்பற்றி அவர்கள் மூலம் அறிந்துகொள்ள வேண்டுமென்பது என் அவா. ஆனல், ஏனோ என் உள்ளம் அவளைப்பற்றி விசாரித்தறியத் தயங்கியது. அவளைப்பற்றி ஓயாது ஒழியாது சிந்தித்துக்கொண்டிருந்தேன். அவளைப் பற்றிப் பேசவும் பேசினேன். ஆனல் ஏனோ நேரடியாகக் கேட்டறிவதற்குத் தயக்கம்!

திடீரென்று ஒருநாள் — சரியாக ஒரு மாதம் முடிந்தபின் ஒருநாள் தலைமையதிகாரி என்னை அழைத்தார். நான் மகிழ்ச்சியோடு குதித்துக்கொண்டு அவரை அணுகினேன்.

ஐயோ, என் தலையில் வெடிகுண்டைத் தூக்கிப் போட்டுவிட்டாரே அவர்.

"திருவாளர் பாலு, நீங்கள் எழுதிய இரண்டு கடிதங்களையும் தலைமை நிலையத்தினர் பார்வையிட்டனராம். உங்களுக்கு நன்மையாக உத்தரவு போட்டிருக்கிருர்கள்......"

தலைமையதிகாரியின் பேச்சு எனக்குப் புரியவில்லை. நான் வியுப்

போடு அவர் முகத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். அவர் தொடர்ந்தார்:

"....பாவம், இங்கே மாற்றிவந்து ஒரு மாதம் பெருந்தொந்தரவுகளுக்கு இலக்காகி இருப்பீர்கள். கவலைப் படாதீர்கள். இன்று மாலையே நீங்கள் ஊருக்குப் போகலாம். உங்களைத் திரும்பவும் அங்கே மாற்றிவிட்டார்கள்."

நான் இடிந்துபோனேன். என் உள்ளம் தகர்ந்துபோய்விட்டது. ஒன்றும் பேசவில்லை. அப்படியே மௌனமாக நின்றுவிட்டேன்.

நான் உடனே புறப்படவில்லை. மூன்று நாட்கள் விடுமுறை பெற்றுக்கொண்டு அங்கே தங்கினேன். எனினும் உள்ளத்தில் அமைதி இல்லை. அவள் வாழ்கின்ற வட்டாரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தேன். பித்தனைப்போல் திரிந்துகொண்டிருந்தேன். என் மனத்தில் ஒரு ஏக்கம். அவளை நான் ஆயிரம் ஆயிரம் தடவை இமைகொட்டாது பார்த்துக்கொண்டே இருந்துள்ளேன்—தொலைவில் நின்றபடி, நெருங்கி நின்றபடி. அவளின் ஒவ்வொரு அங்க அசைவையும் என் உள்ளம் படம்பிடித்து வைத்திருந்தது. அவள் சிரிப்பதை எத்தனையோ தடவை பார்த்துக்கொண்டே, கேட்டுக்கொண்டே இருந்துள்ளேன். அவள் பேசும் இனிய மொழிகள் மட்டுமல்ல, அவள் சினத்தோடு, வெறுப்போடு பேசுகின்ற பேச்சுக்களை எல்லாம் செவிமடுத்துக் கொண்டிருந்துள்ளேன். அவை எல்லாம் என் காதுகளில் இன்னொலி எழுப்பிக்கொண்டே இருப்பதை இன்னும் கூட நான் உணருகிறேன். ஆனால், அவளுடன் நான் ஒருநாள்கூட உரையாடியது கிடையாது. நேருக்கு நேர் நின்று ஒருமொழிகூடப் பகர்ந்தது கிடையாது. அந்த ஏக்கம் என்னை வாட்டத் தொடங்கியது. நான் அங்கிருந்து கிளம்பவேண்டும். நேரம் மணிக்கு மணி நெருங்கிக்கொண்டு, குறுகிக்கொண்டு வந்தது. அதற்கேற்ப என் ஏக்கம் வளர்ந்து கொண்டு வந்தது.

கடைசி நாள். நான் கிளம்ப வேண்டிய நாள். இன்னும் இரண்டே இரண்டு மணிநேரம். பிறகு அங்கு நான் இருக்கமுடியாது. அவளைக் காண முடியாது. நாட்கணக்கிலே, மாதக் கணக்கிலே பார்க்கமுடியாது. ஒருமுடிவு செய்துகொண்டு எழுந்தேன். ஒரு துணிச்சல்பிறந்தது உள்ளத்தில். ஒரே ஒரு வார்த்தையாவது அவளுடன் பேசிவிட வேண்டும். நடந்தேன். எதிர்ப்பட்டார் உள்ளூர் நண்பர் ஒருவர் அப்போது. அவரிடம் என் உள்ளத்தை எல்லாம் அப்படியே கொட்டி அழுதுவிட வேண்டும்போல் தோன்றியது அந்த நிலையில். ஆயினும் அழவில்லை. வார்த்தைகள் உள்ளத்திலிருந்து வெடித்துக்கொண்டுதான் கிளம்பின. ஆனால், வாயினின்று வெளிப்படும்போது தயங்கித் தயங்கித் தடுமாற்றம் காட்டின. எப்படியோ என் உள்ளக் கிடக்கையை உணர்ந்துகொண்டார் நண்பர்.

நண்பர் முகத்தைச் சுழித்துக்கொண்டார். சூள்கொட்டிக்கொண்டார். அது என்னவோ போலிருந்தது எனக்கு. அது ஏன்? ஆவல் பெருகியது அவர் நிலையினைத் தெரிந்துகொள்ள.

அவர் பேசினார்: "இதற்குப்போயா நீங்கள் இவ்வளவு ஏங்கிப்போய்விட்டீர்கள். அந்தப் பெண்ணின் எழிலைப்பற்றி நீங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். ஆனால்..."

ஏன், அவர் பேச்சை நிறுத்திக் கொண்டு என்னை உற்றுப்பார்க்கிறார்? 'விரைவில் சொல்லுங்கள்—உள்ளத்தில் உள்ளதை' என் கண்கள் பரிதாபமாகக் கெஞ்சின.

"அவள் எழிலுக்கும் குணத்துக்கும் தொடர்பே இல்லை. அவள் ஓர் அழகிய மணமிக்கமலர்தான், மென்மலர். ஆனால் புதுமலர் அல்லள். பொதுமலர். மலரின் நல்லொளியை அவளிடம் எப்படித்தான் நீங்கள் கண்டீர்களோ! நான் வியப்புறுகிறேன். நாடுகின்ற வண்டை எல்லாம் பொருள் ஒன்று கிட்டினால் போதுமென்று கூடுகின்ற அக்கொடுங் குணவதியிடம் எப்படித்தான் உங்கள் உள்ளம் அன்பினை, நற்பண்பினைக் காண நினைத்ததோ! ஐயகோ!"

பெரும் பாறையொன்று தலையில் வீழ்ந்து, உடலோடு உள்ளமும் நசுங்கிய நிலைக்கு அப்பாற்பட்டதொரு கொடுநிலையில் வீழ்ந்தேன் நான். உடனே கிளம்பினேன். ஊர் வந்து சேர்ந்தேன்.

ஆயினும், அவளைப்பற்றி என் உள்ளம் ஓயாது, ஒழியாது எண்ணிக்கொண்டே இருக்கிறது. மறக்க நினைக்கிறேன்; முனைகிறேன். முடியவில்லை. அது ஏன்?

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

களிறுகளே நாணத்தோடும், மானத்தோடும் மாண்புற்றிலங்கிய தெனில், அந்நாட்டு மக்கள் 'மயிர் நீப்பின் வாழாக் கவரி மான்' போல் மானத்தோடும், நாணத்தோடும் வாழ்ந்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் தேவையோ?

வீறுற்றெழுந்த மாற்றரசை மண்ணோடு மண்ணாக்கி மடித்துவிட்டு, வெற்றி விழாவிலே வீரநடை போட்டுப் பெருமிதம் கொண்டு வீதிவலம் வந்தான் சோழவளநாடு கண்ட கிள்ளி!

வீதிகளெங்கும் மாவிலைகள்; தோரணங்கள்; தெருவெங்கும் மகிழ்ச்சியின் விளையாட்டுகள்; வெற்றியின் விருதுகள்; ஒவ்வொருவரின் உள்ளமும், இல்லமும் இன்பத்தால் மகிழ்கிறது! இத்துணைச் சிறப்புக்கு மிடையே சோழன் வீதியுலா வந்து கொண்டிருக்கிறான். அந்த நேரத்தில் வந்தவனின் சிறப்புரைத்து, வெற்றியின் பெருமைகளைப் பெரிதென விரித்துரைத்து, பெரியவர்கள் ஆவும், பொன்னும் பொருளும், பெற்றார்கள்; நாவன்மை கொண்டோர் நல்லுரை கூறி, மலையொத்த மாபெரும் களிறு பெற்றுக் களித்த வண்ணம் செல்கின்றனர்! இந்நிலையில் சோழன் கண்டான் சோகக் காட்சியொன்றை!

அவன் கண்ட அந்தக்காட்சிதான் உள்ளத்தை உலுக்கி உருக்கியது. அப்படியென்ன காட்சியைக் கண்டு விட்டான், அந்தக் காவலன் என்று கேட்கின்றீர்களா?

வெற்றிபெற்ற வேந்தன் வீதியுலா வரப்போகிறானென்ற செய்தியறிந்து சோழநாட்டு மக்கள் வீடுகளுக்கு வெள்ளையடித்துச் சுத்தம் செய்து மகிழ்ந்ததால், வீடுகளிலே கூடுகட்டி வாழ்ந்த சிலந்திகள் வாழவழியின்றி வெளியிலே தயங்கித் தவித்துக் கொண்டிருந்த அந்தக் காட்சிதான், அவன் கண்ட—உள்ளத்தை உலுக்கிய காட்சி! வெற்றியுலா வந்த வேந்தனின் உள்ளத்தில் வேதனை விழா! ஊரெங்கும் உளம்பொங்கும் மகிழ்ச்சி விழா!

சோழன், போரெனில் பார் நடுங்க வைக்கும் கொடியவன்! அன்பெனில் அனைத்தையும் இழக்கச் சித்தமாகும் சித்தமுடையவன் என்பதைத்தானே இப்பாடல் நமக்கு விளக்கிக் காட்டுகிறது! வாழ்க அவன் கருணையுள்ளம்!

✻

முல்லையும் பூத்தனையோ!

(ந. இறைவன் பி. ஏ.)

வண்ணத்தில் பூத்துச் சிரிக்கின்ற மலர்க் காவில், தன் எண்ணத்தில் பூத்துச் சிரிக்கும் எழிற்பாவையைக் கண்ணெதிரில் கண்டு களிப்பெய்தக் காத்துக்கிடந்தான். தாள்படு குழலாள் என்று அவளழகைச் சொல்லவா? அன்றிச் செவிபடு விழியாள் என்று அவள் வேல்விழியைச் சொல்லவா? என்று அவள் அழகை தமிழ்படுத்திக் கொண்டிருந்தான்.

அவள் நினைப்பு வருகின்றபோது இன்பம் இன்பம் என்கிறார்களே, அது இதுதானா என்பான். அவளை நேரில் காண்கின்றபோது இன்பத்திற்கோர் எல்லை எல்லை என்கிறார்களே, அது இதுதானா என்பான். அவளை நினைத்தாலும் இன்பம். நேரில் கண்டாலும் இன்பம். நினைப்பதிலும் காண்பதிலுமே இன்பம் என்றால், அவளைத் தொடுவதிலும் வளைப்பதிலும்... அதற்கு என்ன பெயர்! என்ன பெயர்! என்று புதியதோர் சொல்வடிக்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

காவியம் ஒன்றிற்கு ஆயிரம் ஆயிரம் ஓவியம் தீட்டலாம். ஆனால் ஓவியம் ஒன்றை வைத்துக் காவியம் ஒன்றேனும் படைக்கமுடியுமா என்ற ஐயம் அவனுடைய உள்ளத்தில் நெடுநாட்களாகக் குடிகொண்டிருந்தது. ஆனால், அவன் நெஞ்சின் ஓவியத்தை வைத்துக் காவியம் ஆயிரமாயிரம் படைக்கலாம் என்ற விளக்கத்தைப் பெற்றான், அவளது உருவம் அவனது இதயத்தில் இன்ப யாழை மீட்டியபோது, அவளது நடைக்கோர் காவியம்! அழகாக அசைகின்ற இடைக்கோர் காவியம்! படைகள் பலவென்றவனே! என் கண்ணின் கடையை நீ வெல்வையோ என்று கடைவிழியால் சிரித்துச் சிரித்து என்னைச் சிறகொடிந்த பறவையாக்கும் அவள் கண்ணின் கடைக்கோர் காவியம்! என்று அவன் இதயத்து ஓவியத்தை வைத்து எண்ணற்ற காவியங்கள் படைத்தல் எளிதென்றே சொன்னான்.

அவன் இதயத்து ஓவியம் வருவதைப் பார்க்கமுடியாமல் காவில் இருள் சூழ்ந்தது. அவன் தவித்துக் கிடந்தான் அவளைக் காணமுடியாதோ என்றெண்ணி. நீலவானம் அவனுக்குத் துணை செய்வதுபோல் அடிக்கொருமுறை மின்னி மின்னி அவள் வருகையைப் பார்த்துக் கொள் என்று கருணை புரிந்தது அவனுக்கு. அவனும் மின்னலின் துணையில் மின்னல் இடையாளைத் தேடிக்கொண்டிருந்தான். அன்னமும் வந்தாள்.

பேசிப் பேசி இன்பம் குவித்து வந்த அவள் அன்றுமட்டும் பேசவே இல்லை. நாணித் தலைகவிழ்த்து நின்றாள். ஏனிந்த நிலை என்றான். சிலையவளோ தான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்பாள்போல் தலை தாழ்த்தியே நின்றாள்.

கலைவாழும் முழுமதியே பேசென்றான். என்னழகில் நிலையாமை என்ன கண்டீர் எனக் கேட்டாள். உன்னழகிலா? நிலையாமையா? என்று வினாக்குறியாக மாறினான். நிலையாமை என்னழகில் இல்லையென்றால், பின்னெதற்கு நிலையாமை உடைய முழுநிலவோடு என் முகத்தை ஒப்பிட்டீர் எனக் கேட்டாள். தங்கத்தில் வடித்துத் தளிர்போல் துவள்கின்ற செங்கயல் விழியாளே செந்தமிழோநீ! என்றான். செந்தமிழே நானென்று சிரித்தோடி அருகில் வந்து நின்றாள். இந்தா பழமென்று கன்னமும் இதழும் காட்டிச் சிரித்தாள், இடர் செய்து கொல்கின்ற இதயத்து விளக்கே! பழம் தூங்கும் கொடியே! படர்க நீயென்று மார்பீந்தான். அவளோ ஆடாமல் அசையாமல் சிலைபோல் நின்றிருந்தாள்.

செதுக்காத சிலையேநீ, சிரிக்காமல் நின்றிருத்தல் எதற்காக? என்றவன் கேட்க, அவள் அவன் இளமீசைதனைச் சுட்ட! அடிக்கரும்பு இடையசைய நடை பழகும் வடிவழகு மதுப்பாவாய்! முடிவில்லாப் பேரழகே! முக்கனியின் பெருஞ்சுவையே! இதற்கா நீ சிரிக்கவில்லை! நீ எடு என்றால் பறக்குமிது! இதற்கா நீ சிரிக்கவில்லை! பளிங்கு சிலையே நீ பதுக்காதேஉன்சிரிப்பை! என்று அவன் வேண்ட, இதழில் தவழ்ந்தது எழில் சிரிப்பு.

நாளை நமக்கு மணம் நடக்க இருக்கும்போது என்னை எதற்கு? இன்று இங்கு வரச்சொன்னீர் என்று அவள் குழைய, நாளைமுதல் நாம் இருவரும் காதலனும் காதலியும் அல்லவே! கணவனும் மனைவியும் அல்லவா! அதனால்தான் என் காதலியைக் கடைசி முறையாகச் சந்திக்கக் காவிற்கு வரசொன்னேன். உனக்கு விருப்பமில்லையோ உன் காதலனைக் கடைசி முறையாகச், சந்திக்க என்று அவன் அவளை மடக்க; நான் எண்ணியதையே நீங்களும்எண்ணியிருக்கிறீர்கள். இதிலே உங்களுக்கு என்ன பெருமை என்று அவனை அவள் மடக்க இருவருடைய பார்வையும் ஒன்றோடு ஒன்றாகிப் பிரிய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

'முத்தெ'ன்றான் தன் கன்னத்தைக் காட்டி!

'முடியாது போ' என்றாள்!

ஏனென்றான்! நாளை இரவென்றாள்! முத்தென்றதை என் கன்னத்தில் முத்தமிடு என்று கொண்டனையோ? ...இல்லை! இல்லை!! இதோ ஆழ்கடல் முத்து! அணிந்துகொள் நீ என்று தன் கையில் வைத்திருந்த முத்தினை அவளிடம் கொடுத்தான். நாணத்தில் நின்றவளை எங்கெந்தக் கோணத்தில் நின்றவன் முத்தமிட்டானோ அவள் அறியாள். அவளைத் தன் அணைப்பினிலே கொண்டு சென்று அவளது தோழிகளிடம்ஒப்படைத்து விட்டுத் திரும்பினான்.

நாளெல்லாம் நம் பாட்டைக் கேட்டுக் கேட்டு நாடெல்லாம் நம்மைப் புகழ்கிறது. அறிவிருக்கும் அடிக்கு அடி! அழகிருக்கும் சொல்லுக்குச் சொல்! என்றெல்லாம் உங்கள் பாட்டைக் கேட்டு நாடே புகிழ்கிறது. அந்தப் புகழ்ச்சியைக் கேட்ட என் நெஞ்சம் நெகிழ்கிறது.

என் பாடலை மட்டும்தானா புகழ்கிறது நாடு. உன் ஆடலையும், ஆடலுக்குக் கூடிவரும் உன் பாடலையும், தேடிவந்து உன்னிடத்துக் குடிபுகுந்த உன் அழகினையும், கண்டவரும், கேட்டவரும் புகழ்மாரி பொழிகின்ற வார்த்தைதனைக் கேட்டுக் கேட்டு மகிழ்கிறேன் நான். இது அன்றோ பாடல் என்பாரும், இது அன்றோ ஆடல் என்பாரும்! இவையிரண்டும் மட்டுமின்றி யாழோ? குழலோ? குயிலோ? அன்றி இவள் குரல்தானோ எனப் புகழ்ந்து, இவளன்றோ பாடினி என்பாரும்! இம்மண்ணில் எங்கெங்கும் இருக்கின்றார் என்றறிந்து, உனக்கு நான் தலைவன் என்றெண்ணி இறுமாந்து வாழ்கிறேன்.

நாட்டிலே நம் இருவருக்கும் இருக்கின்ற புகழ்பற்றிப் பேச வரவில்லை நான். நம்மை வாட்டி வளைவெடுக்கும் வறுமை பற்றிப் பேசவந்தேன். தென்றலினும் இனிமையான இசை மழை பொழிகிறோம். ஆனால் தென்றலைச் சுவைக்க வேண்டிய நேரத்தில் தீயில் அல்லவா வாடுகின்றோம் — பசியில் அல்லவா சாகிறோம்.

ஒல்லையூர் எல்லையுள் வந்தாகிவிட்டது. இனி இல்லையெனும் தொல்லை பற்றி பேசிக் கொண்டிருக்காதே என்று எத்தனைமுறை சொல்வது. ஒல்லையூர் எல்லையுள் கால்வைத்தால் தொல்லைகள் உங்களைத் தொடராது என்று வழியிலே கண்ட பாணன் கூறிய கூற்றையுமா மறந்தாய்! இல்லையெனும் சொல்லுக்கு இதுதான் எல்லையென ஒல்லையூர் எல்லை சொல்லிக்கொண்டு உங்களை வரவேற்கும் என்றதையுமா மறந்தாய்! பாடித் திரிகின்ற நம்மை ஏன் இந்த நாடு வாடிக்கிடக்க செய்கிறது என்று கேட்கிறாய்! மயில் ஆடுகிறது. கண்டவர்கள் மகிழ்கிறார்கள். குயில் கூவுகிறது. கேட்டவர்கள் நெகிழ்கிறார்கள். மயிலும் குயிலும் ஆடவும் பாடவும் செய்யுமே தவிர, தங்கள் ஆடலுக்கும் பாடலுக்கும் கூலி எதையும் கேட்பதில்லை. கேட்டால் கிடைக்கும். ஆனால் அவைகள் கேட்பதில்லை. நாமும் குயிலும் மயிலும் போலத்தான். நம்முடைய இசையைக் கேட்டவர்கள், பிறந்தால் இவர்களைப்போல் பிறக்க வேண்டும் என்று பேசிக்கொண்டு செல்வார்களே தவிர, கோடைக்கும் குளிருக்கும் இவர்கள் என்ன செய்வார்கள் என்று எண்ணிக்கொண்டு செல்லமாட்டார்கள். இன்பத்தை அனுபவிக்கும்போது அது எத்தனை தொல்லைகட்கு இடையிலே மலர்கிறது என்று எண்ணிப் பார்க்காது உலகம். அது குற்றமல்ல. இயல்பு.

புகழ்தான் நமது குறியே தவிர, பொருளல்ல என்பதை நினைவில் வை. நாம் காணச் செல்ல இருக்கின்ற ஒல்லையூர் மன்னன் கலையார்வம் கொண்டவன் மட்டுமல்ல! கலைஞனுமாவான். அவன்முன் நாம் காட்டப்போகின்ற கலையில் குறையேதும் நிகழாமல் பார்த்துக்கொள், அதற்கு ஆயத்தமாகு! ஆசைகளை விடு' என்று பாடினி ஒருத்தியும் பாணன் ஒருவனும் பேசிக்கொள்கின்ற பேச்சு; தன் காதலியைக் கடைசி முறையாக கண்டு, அவள் இதழில் தேன் சுவையை உண்டு; தேன் கொடுத்துக் களைத்தவளைத் தன் அணைப்பில் கொண்டுசென்று அவளது தோழிகளிடம் ஒப்படைத்துவிட்டு மீண்ட ஒல்லையூர் மன்னன் காதில் விழுகிறது.

பாணனும் பாடினியும் பேச்சை முடித்துக்கொண்டு யாழெடுத்து இசை எழுப்புகின்றனர். கொட்டும் குளிரில் அவர்களுடைய பல் கொட்டும் பறை பெரும் இசையாக இருக்கவே...குளிரில் வாடுகின்ற அந்த கலைஞர்களிடம் தேர்விட்டு இறங்கிச் சென்று' 'ஐயன்மீர் ஏனிந்தக் குளிரில் வாடுகிறீர் எனக்கேட்டு, இருவரையும் தேரில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்கு செல்கிறான் மன்னன்.

பாணனும் பாடினியும் அரண்மனையின் அழகிலே திளைக்கின்றனர். பூக்களின் துணைகொண்டு செய்யப்பட்ட இரு பெண்ணுருவங்கள் வாயிலில் நின்றிருக்கும். மலர்களிலே செய்து நிறுத்தி வைக்கப்பட்ட போர்வீரர்களை அந்தப் பெண்கள் பார்த்துப் புன்முறுவல் பூப்பது போலிருக்கும். அத்தனையும் முல்லை மலர். முல்லைமனை என்கின்ற வகையில் அந்த அரண்மனை அழகை அள்ளி உதிர்த்துக்கொண்டிருந்தது. வியப்பில் மூழ்கிக்கிடந்த பாணனையும் பாடினியையும் அரண்மனை உள்ளே அழைத்துச்சென்று அரண்மனையைச் சுற்றி வந்தான். முல்லை என்றால் எனக்குஉயிர். அதனாலேதான் முல்லையில் அலங்கரித்துள்ளார்கள் என்று அவன் சொல்ல! இவ்வளவு முல்லை என்று பாணன் வாய்திறக்க......! எங்கே விளைகிறது என்றுதானே கேட்கிறீர்! என்று கேட்டுவிட்டு ஒல்லையூர் நாட்டில் முல்லையில்லா இடத்தினையே நீங்கள் காண்பது அரிது என்று மன்னன் விளக்கினான். நாளை எனக்குத் திருமணம் அதற்குத்தான் இந்த விழாக்கோலம் என்று பாணனிடம் மெல்லச் சிரித்துக்கொண்டே ஒல்லையூர் மன்னன் விழாக்கோலம் ஏன் என்று விளக்கம் தந்தான்.

காலையில் மணவினை நிகழ்ந்தது. பாணனின் இசைகேட்டு மணவிழாவில் பங்கேற்ற மன்னர்கள் அத்தனைபேரும் புகழ்ந்தார்கள். அத்தனைபேரும் புகழ்ந்த புகழ்ச்சியும் தூசு என்கின்ற முறையில் பாணனைக் கட்டித்தழுவி, முத்தமிட்டு, இதுவன்றோ யாழ்? இதைமீட்டிய இதுவன்றோ யாழ்மீட்டும் கை' என்று யாழையும் அவனதுகையையும் மீண்டும் மீண்டும் புகழ்ந்தான் மன்னன். பாடினியையும் மன்னனின் மனைவி வாரியணைத்து உச்சி மோந்தாள். பாணனும் பாடினியும் இங்கில்லை! இன்பத்தேர் ஏறி எங்கேயோ பறந்தனர். அன்றுமாலையே மன்னனுக்கு முதலிரவு வந்தது. பாணனுக்கும் பாடினிக்கும் முதலிரவு வந்தது. பாணனுக்கும் பாடினிக்கும் மன்னனின் மனதைக் கவர மீண்டும் ஒரு வாய்ப்பு.

காதல் களத்திலே விளையாடியவர்கள்தான் மன்னனும் அவனது துணைவியும். அதனால் அவனை அவள் அறிவாள். அவளை அவன் அறிவான். என்றாலும் முதலிரவு கதவு திறக்கப்படும்போது நாணம் அவளை விடவில்லை. நாணிக்கோணி நிற்கின்ற அவளை; அவளது தோழிகள் பின்னிருந்து அழைத்துக் கொண்டு வரும்போது பாடினி பாடுகிறாள். பாணன் யாழ்மீட்டுகிறான்.

நாணத்திற்காக நாம் பிறந்தோம்
சொல்மகளே நீ
நாணத்தினை விட்டெறிந்து போமகளே நீ
—நாண

கற்றறியாப் பாடங்காட்டக்
காத்திருப்பாரு
கவிதையுலகில் உனையணைத்துப்
பறந்திடுவாரு!
கோமகளே என்று உன்னைப் புகழ்திடுவாரு
கோவைக் கனி இதழைமெல்ல
வெளுத்திடுவாரு! —நாண

பூமகளே என்று உன்னைப் புகழ்ந்திடுவாரு
புகழ்ச்சியிலே உன்னையவர் மயக்கிடுவாரு
பூவென்று உன்னையவர் முகர்ந்திடுவாரு
பொல்லாத வேலையெல்லாம்
செய்திடுவாரு! —நாண

போமகளே என்று உன்னைச் சினந்திடுவாரு
பூமகளின் பூவடிகள் நோவெடுக்க
கோமான்மேல் கோபங்கொண்டு
நீ நடந்தால்
பொறுமகளே என்னையென்று
அணைத்திடுவாரு —நாண

தாமகளே என்று உன்னைக்கெஞ்சிடுவாரு நீ
தருமுன்னே உன் இதழ்களையவர்
மென்றிடுவாரு
பாமகள் என்று உன்னைக் கவிபுனைவாரு
பால்நிலவு என்று உன்னைத்
தழுவிக்கொள்வாரு —நாண

பார்மகளே! பார்மகளே! பெற்றவரைப்
பார்மகளே
பெருமைபொங்கப்பார்க்கும்
அவரைப்பார்மகளே!
பார்மகளைப் பார்த்து நடை நடப்பவளே-நீ
பண்புதனை வளர்த்து வாழப் போமகளே!
—நாண

கதவு தாழிடப்படுகிறது. இசையும் நின்றது. 'இன்பத்தின் கதவு திறக்கப்பட்டிருக்கும் இல்லையா?' என்று பாணன் பாடினியைக் கேட்க, பாடினி இது என்ன கேள்வி என்று தன் விழியால் பாணனைக் கேட்கிருள்.

ஒல்லையூரிலேயே பல நாள் தங்கிவிட்டதைப் பாடினி பாணனுக்கு உணர்த்துவான் வேண்டி, ஒல்லையூர் மன்னனுக்கு அடிமையாகிவிட்டீர்கள் போலிருக்கிறதே! எத்தனை நாளைக்கு இங்கேயே தங்கியிருப்பது நாம்! என்று அவள் கூற; அன்பாக என்னை நடத்த விரும்புகின்றவர்கட்கு நான் அடிமையாக இருக்க விரும்புகிறேன். அடிமையாக நடத்த விரும்புகின்ற ஒருவனுக்கு அவனது முதல் பகைவனுக இருக்க விரும்புகின்றேன். இந்த முறையில் நான் ஒல்லையூர் மன்னனின் அன்பிற்கு அடிமை என்று பாணன் சொல்ல, இதனைக் கேட்டுகொண்டு மறைந்து நின்ற மன்னன் கண்களில் நீர் மல்க பாணன் பாடினி இருவரின் முன்வந்து நிற்கின்ருன் மன்னன். அவனது அன்பிற்கு மீண்டும் இருவரும் அடிமையாகின்றனர்.

பாணனுடைய நெஞ்சைத் துளைக்கிறது இந்தப் பழைய நினைவுகள். நாடுகாக்கும் நல்லவனின் கூடு விட்டுஆவி பிரிந்துவிட்டது. இரவலர்கட்கு இல்லையெனுது ஈயும் புரவலன் புதைகுழிக்குப் போகிருன். வெற்றி அன்றி தோல்வியே காணுத அந்த வீரனின் நாடே அழுகிறது. இவரை இவர் தேற்றுவார் ஆற்றுவார் என்கின்ற நிலையின்றி நாடே அழுதது. சாத்தனின் பிணத்தினை எரித்து விட்டு வீடு திரும்புகிருன் பாணன். அவனைப் பார்த்து 'ஏனழுதாய்?' என்று ஒருவன் கேட்க... இப்படிபட்ட ஒரு நன்றிகெட்ட மனிதனும் வாழ்கிருனே இம்மண்ணில் என்று எண்ணிய அவனுடைய நெஞ்சம் நொந்தது. நொந்த உளத்தோடு வேதனை பொங்கப் பாடிக்கொண்டு தெருவிழியே நடந்தான் பாணன். அந்தப் பாட்டு ஒல்லையூர் எல்லையுள் ஒலித்துக்கொண்டே இருக்கிறதாம். இதோ:

"ஏன் அழுதாய் என்று எனைக்கேட்க
வந்தாயே
ஏன் அழுதாய் என்று தமிழன்னையை
யார்கேட்டார்—ஏன்

மாத்தமிழ் வீரன்! மக்களின் தலைவன்!
இறந்ததை எண்ணி! கோவெனக் கதறி
தேனினைப் பொழியும்! மலரினைச் சிந்தி!
பூங்கொடி அழுததே யாரைக்
கேட்டார்—ஏன்

தமிழ்க்காவலன் இறந்ததைக் காணச்
சகியாமல்
காதலர் நிலவும் மேகத்தில் மறைந்து
கதறி அழுததால் சிதறிய கண்ணீர்
மழையெனத் தெரிந்தும் யாரதைக்
கேட்டார்—ஏன்

மலரும் அரும்பை மொட்டினில்
உதிர்த்து
மரமும் கொடியும் அழுததை யார்
கேட்டார்!
குழலும் யாழும் இசையினை மறந்து
புலம்பியழுவதை ஏனென யார்
கேட்டார்—யார் கேட்டார்—ஏன்

பண்பாய்ப் பிறந்தவன் மாய்ந்ததை
எண்ணிப்
பைந்தமிழ் பாவையர் சேல்விழி சிவக்க
பாடுஎன உருகி வாய்விட்டுப் புலம்பி
அழுவதை யார்போய் ஏன் எனக்
கேட்டார்—ஏன்

தன்னுயிர் தன்னிலும் மேலென
எண்ணி
தன்னைக் காக்கும் தலைமகன் இழந்து
அன்னைத் தமிழவள் அழுவதைப்
பார்த்தும்
ஏன்அழுதாய் என்று எனைக்கேட்க
வந்தாயே! —ஏன்

பாவலர் அழுதார்! அவர்தம் பாவும்
அழுதது!
கூவும் குயிலும் கோவென அழுததே!
காவலர் இழந்த நாடும் அழுததே
கண்களைப் படைத்த யாவரும் அழுதாரே
—ஏன்

நன்றிகெட்ட மனிதர்களும் இம்மண்ணில் வாழ்கிருர்களே என்று ஏனழுதாய் என்று கேட்டவனைத் தூற்றிவிட்டு...... நடந்துகொண்டு இருக்கின்ருன். பாணன் வழியில் முல்லைக்கொடி ஒன்று பூத்துப் பொலிவோடு நிற்கிறது. நன்றிகெட்டவர்கள் மனித இனத்திலே மட்டும்தான் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தை மாற்றிக்கொள் என்று சொல்வதுபோல் நீயும் பூத்தாயோ முல்லையே! எனக்கு முல்லை என்ருல் கொள்ளை ஆசை. அதனுல்தான் இந்த அரண்மனையை முல்லைமனை, என்று சொல்கின்ற வகையில் முல்லையால்அலங்கரித்துள்ளார்கள். முல்லைக்கொடி இல்லாத நில எல்லையை நீங்கள் ஒல்லையூரில் காணமுடியாது என்று சொல்லி பெருமைப்படும் அந்தச் சாத்தன் மறைந்த இந்த நாளில் ஒல்லையூர் எல்லையுள் நீ பூத்திருக்கிருயே! மலர் விரும்பிச் சூடுகின்ற இளம் மங்கையர்கள் சூடார்! நல்ல இசையை எழுப்புகின்ற யாழிலே பாணன் சூடான்! பாடினி அணியாள்! பின்னெதற்கு நீ இந்த மண்ணிலே பூத்தாய் எனக் கேட்டுவிட்டு பாணன் நடந்துகொண்டே இருக்கிருன் பாடினி பின் தொடர.

அந்தப் பாணனை மீண்டும் காண வேண்டும் என்று துடிக்கின்ற தமிழ் நெஞ்சங்கள் புறநானூற்றிலே குடவாயிற் கீரத்தனுர் படைத்து வைத்த இந்த யாழை மீட்டுங்கள். இந்தச் சோகத்தின் சுவையை வேறெந்த மொழியிலும் காணமுடியாது என்கின்ற வகையில்! ஏன் தமிழிலே கூட இப்படியொரு சோகத்தை யாரும் இனி உருவாக்க முடியாது என்கின்ற வகையில்! அந்தப் பாடல் இருப்பதைக் காணலாம். இதோ அந்தச் சோக யாழ்:-

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கி
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே
—புற. 242

★

புலவனும்--புரவலனும்

[க. கன்னையா]

சங்க காலத்து இலக்கியப் பனுவல்களை — இனிய தமிழ் வழியும் எழில் நிறைக் காவியங்களை—ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தனக்கு நிகர் தானே என விளங்கிய பைந்தமிழ்ப் புலவர்கள் யாத்த தங்க நிகர் கவிதைகளைக் கவனத்துடன் படிக்குங்கால், அது பண்டு முதல் இன்று வரை நாகரிகத்தின் சிகரத்திலே கனிதமிழ் மக்கள் நடமாடினர் என்பதைத் தெற்றென விளக்கும்.

வேல் தாங்கிய வீரனின் வீர வரலாறுகளையும் — வேல் விழியரின் காதற் சுவைதனையும் நமக்குக் குழைத்துக் கொடுக்கின்றது. குளிர் புனலின் குளுமை தவழ்கின்றது, மலர்விழி மங்கையரின் மதுரமொழி நிகர் சொற்கூட்டம் களி நடனம் புரிகின்றது. இலக்கிய நயம் மிஞ்சுகின்றது—இனிய தமிழ் கொஞ்சுகின்றது. பஞ்சத்திலே கொஞ்சுகின்ற அஞ்சுகங்களின் ஆசைக் காதலர்கள் விழுப்புண்பட்டு வீழ்ந்துபட்ட வீர வரலாறுகளை நமக்கு நயம்படக் காட்டுகின்றது. மறத்தமிழனின் புறத் தன்மையையும் மறத் தமிழ்ப் பெண்ணின் அகத் தன்மையையும் அழகுபட நமக்கு அள்ளித் தருகின்றது. ஞாலத்திலே மக்கள் தோன்றி இடம் தமிழகத்தின் தென் பாகந்தான் என்பதை வரலாற்று வல்லுனர்கள் வரையறுக்கின்றனர். பாவேந்தனின் காவியத் திறனையும், கோவேந்தனின் மறம் கலந்த கொடைத் திறனையும் அறிய தமிழ்க் காவியம் நமக்குத் தருகின்றது.

முச்சங்கங்கள் முகிழ்த்த முத்தமிழ் இன்னும் தமிழகத்திலே ஏன் உலகத்திலே நறுமணம் வீசுகின்றது. தமிழ்ச் சுனையும் நனைந்து விட்டால் அதன் பெருமையை எடுத்து விரிக்கின் பெருகும்!

இக்காலத்தே, நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவர் வண்ணத் தமிழினால் தம் எண்ணத்தைப் பண்ணுக்கி மன்னவனுக்கு ஈந்த பொன்னுன கருத்தை இங்கு காணக் கிடக்கின்றது.

குறுநில மன்னவனும் மலையமான் திருமுடிக்காரி என்பான் கோவலூரில் குடிதழீஇய கோனாட்சி செய்தான். கடையேழு வள்ளல்களில் ஒருவனாகத் திகழ்ந்தவன். முள்ளூர்க் குன்று இவனது கொற்றத்தின் கீழ் அமைந்தது. முள்ளூர் எனுமிடத்தில் அந்நியரை வென்று வெற்றி வாகை சூடிய வேல் மறவன். குறுநிலத்திற்கு மட்டுமல்ல கொடைத் தன்மைக்கும் கொற்றவனாக அமையப் பெற்றவன்.

"பாசறையின்கண் பாய்ந்து வரும் வேல் மறவனின் வேழந்தன்னை வீழ்த்திவிட்டு, அது தாங்கி நின்ற பட்டத்துப் பசும் பொன்னை பறித்தெடுத்து, பொற்றாமரைப் பூவாக்கி வறுமையால் வாடும் பரிசிலருக்குச் சூடி பரிசிலரின் பசி போக்கிட வந்த பைந்தமிழ் வேந்தே! வாழ்க நீ! வளர்க நின் கொற்றம்" தூங்குகின்ற இருளைப்போன்று ஓங்கி வளர்ந்த மரங்கள் தன்னைத் தாங்கி நிற்கின்ற இருட்காட்டையும், ஆர்ப்பரித்து எழும் ஒலிதய அனைத்தவாறு வீழ்கின்ற அருவியையும், விலங்கினங்களின் உயிர் குடித்து வெறியேறிய வேங்கை வீற்றிருக்கின்ற புதர்தனையும் கனிகளைச் சுவைத்திடும் கடுவன்களின் குழாத்தினையும், மலரின் நறிய மணத்தைக் கமந்து வரும் தென்றலானது தவழ்கின்ற காட்சியையும், வண்டினங்கள் இசையெழுப்பும் ஒலி அலைகளை உடைய முள்ளூர் மலையின் முடி மன்னு! முத்தமிழ்க் காவல! மலையமானே!! மாட்சிமை தாங்கிய மன்னவனும் திருமுடிக்காரியே!! பேரறிவு படைத்த பெரும் புலவனும் கபிலன் நின்னை" நின்னுடன் நின் சுற்றமும் பெருக, இனிப் புகழ்வதற்கு இடமில்லை" — "வார்த்தைகளில்லை" என வாழ்த்திப் பேறு பெற்றவனே! பெருந்தகையே!! முத்தமிழ் மொழிந்த வித்தகனும் சேரன் கத்துங் கடலினைக் கிழித்து கட்டாணிப் பொன்தரும்கலத்தினை செலுத்திடுங்கால் இடையில் மாற்றான் இடர் விளைவிக்க இயலுமோ? அதுபோலக் காவியத்தின் காவலனும் கபிலன் நின்னைப் புகழ்ந்து கூறின பின், என்னால் எங்ஙனம் சாற்றமுடியும் நின் புகழை! இருப்பினும் நின் புகழைப் பாடுகின்றேம்"

முரசங்கள் ஒலி எழுப்ப, பகை மறவர் பாசறை நோக்கி விரைந்து ஏக குதிரைகளின் குளம்புகள் புழுதியைக் கிளப்பி வானமண்டலத்தைத் தொடுகின்றளவில் புகை மண்டலமாகத் திகழப்—பிளிருகின்ற களிறுகள் காட்டாறுபோல் கடுகி வர—போர்க்களத்திலே ஒளிறுகின்ற வாளினால் தொகை தொகையாய் வருகின்ற பகைதனைச் சாய்த்து விட்டு, வீர மறவர்களின் அங்கங்களை சிதைத்தெறிந்து அவர்தம் வேழந்தன்னை வெட்டி வீழ்த்தி வீர வாகை சூடிய வேந்தே! வெற்றியின் திரு உருவே!! கற்றறிந்த தமிழ் மன்னு!! பெண்ணையாற்றங்கரைத் தலைவா! பீடுநடைப் பெருந்தகையே! எம் உரையையும் கேட்டு, எம் வறுமையும் நீங்கப் பரிசில் பல நல்குவாயாக" என்றுகேட்கும் பான்மையை நப்பசலையார் கவினூறும் காவியமாக்கித் தந்திருக்கின்றார்,

இதோ:

ஒன்னார் யானை ஓடைப்பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை உரவோன் மருக!
வல்லேம் அல்லேம் ஆயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவம் ஆயின் கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள்
இறும்பின்
பறைஇசை அருவி முள்ளூர்ப் பொருந!
தெறலரு மரபின்நின் கிளையொடும்
பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட்கு எல்லாம்
புலன் அழுக்கு அற்ற அந்த ணாளன்
இரந்துசென் மாக்கட்கு இனிஇடன்
இன்றிப்
பரந்துஇசை நிற்கப் பாடினன்
அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலாது அனையேம்
அத்தை
இன்மை துரப்ப இசைதர வந்துநின்
வண்மையில் தொடுத்தனம் யாமே
முள்ளெயிற்று
அரவுஎறி உருமின் முரசெழுந்து இயம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத்து
ஒழிய
அருஞ்சமம் ததையத் தாக்கி நன்றும்
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ
வோயே.

—(புறம்:- 126)

எல்லையைக் காப்போம்

[கிருட்டினன்]

பெற்று வளர்த்துவிட்டாள் தாய். பெரியவனுக்கிவிட்டான் தந்தை. வேல்வடித்துக் கொடுத்து விட்டான் கொல்லன். இவர்கள் கடன் முடிந்துவிட்டது. பின் எஞ்சியிருப்பது யார் கடன். பிறந்து வளர்ந்து பெரியவனுகி வேலேந்தி நிற்கும் மகன் கடன்கான். போர் முரசு ஒலித்துவிட்டால், அவ்வொலி தன் செவியில் பட்டால், தினவெடுத்தத் தோள்தட்டித் துடித்தெழுந்து வேலேந்தி, வேழமேறி வீரர்களின் அணிவகுப்பில் முதலிடம் பெற்று, மார்தட்டி ஆர்ப்பரித்துப் போர்முனை புகுந்து மாற்றுனை மண்டியிடச் செய்தல்வேண்டும், அன்றி மார்பில் புண்பட்டு மண்மாதா மடியிலே படுத்து மரணமடையவேண்டும். உண்மை வீரனுக்கு இதுவே வெற்றியும், வீர விருதுமாகும். பெற்றுவளர்த்தவர்களுக்கு அவன் பெருமையோடு வழங்கும் காணிக்கையும் கடனுமாகும். வீரனுக்கு வெற்றியிலும் புகழ், வீரமரணத்திலும்புகழ். வேழம் இருந்தாலும் ஆயிரம்பொன் அது இறந்தாலும் ஆயிரம்பொன். இப்படி நாடு காத்தலைத் தன் தலையாய கடனுகக்கொண்டு வீரத்தோடு வாழ்ந்தவர்கள் நம் பண்டைத் தமிழ் நாட்டார்.

களத்திலே சென்று வீரப் போரிட்டு மார்பிலே வேல்தாங்கி மாண்டுபோனுர்கள் தன் தந்தை, கணவன்; சுற்றத்தார்கள். அப்படியிருக்கத் தன் பத்துவயதுப் பாலகனுக்கு எண்ணெய் இட்டுச் சீவிக் கையிலே வேல்கொடுத்து போருக்கு அனுப்பினுள் தாய். பத்து வயதுப் பாலகன் பல எதிரிகளைக்கொன்று; தான் பாய்ந்த வேகத்தில் தானே எதிரியின் வேலில்பட்டு மாண்டு போனுன். முதுகிலே வேல்பட்டு மாண்டுபோனுன் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்ட தாய்என் மகன் "பயந்து ஓடி அதனுல் முதுகிலே வேல்பட்டு இறந்திருப்பானேயானுல் அப்படி வீரமில்லாது இறந்த மகனை வளர்த்த உடலை நாய் நரிகள் தின்னட்டும். இவ்வீண் உயிரை அவ்விடத்திலேயே தத்தம் செய்கிறேன் என்று முழங்கிப் போர்க்களம் சென்று பார்க்கையில் தன் மகன் பிணங்களுக்கிடையே மார்பில் வேல்பட்டு மலர்ந்த முகத்துடன் கிடக்கக்கண்டு அவனைப் பெற்றதைவிட அதிக மகிழ்வெய்தினுளாம் அவன் தாய்.

அவ்வழி வந்த நம்மவன் மாண்டான்!

ஏன்? எதற்காக மரணமடைந்தான்? உணவில்லையா? கொலை செய்து கொண்டானு? நஞ்சுண்டானு? இல்லை! இல்லை!

அயல் நாட்டானை விடுவனே என்று ஆர்ப்பரித்தான். என் திருநாட்டில் ஒரு அங்குலத்தைக்கூட விட்டுக் கொடுக்கமாட்டேன் என்று வீர முழக்கமிட்டான். நாட்டைக் காக்க நாட்டமுடன் போரிட்டான். அதற்குப் பரிசாக மார்பிலே குண்டு. மாண்டு போனுன் வீரத்தோடு.

எல்லை காத்திட, நாடு காத்திட நம்படை முகாம் போட்டிருந்தது. எதிரி தாக்கினுன். இவன் உணர்ச்சி வசத்தால் உந்தப்பட்டான். பிளிறி வரும் களிறுபோன்று பீறிட்டு எழுந்தான். எதிரியின் குண்டு இவன் மார்பில் பட்டது. எடுத்தடி வைக்க முடியாமல் இறந்து போனுன்.

எதிரி வந்தான் ஒரு இடத்தைப் பிடித்தான். பணியச் சொன்னுன். நம்மவன் பணியேன் என்ருன்—ஆவேசம் கொண்டான் எதிரிப் படையைச் சுட்டான்;எண்ணற்ருேர் இவன் துப்பாக்கிக் குண்டிற்கு இரையாயினர். எதிரிப் படை இவனைச் சுட்டது; பல குண்டு இவன்மேல் பட்டது. தப்ப முடியாது தரையில் விழுந்தான் உயிர் பிரிந்தது; மாண்டு போனுன்.

எல்லையைப் பிடித்த எதிரியைக் கண்டான்; வீரம் கொண்டான். வேற்றுடை அணிந்தான் எதிரிப்படையில் நுழைந்தான்.ஏழெட்டுப்பேரைக் கொன்று குவித்தான். சுடுவதைக் கண்டான். எதிரியும் சுட்டான். இவன் மேல் குண்டுபட்டது; வீரமரணமெய்தினுன்.

இறந்தவர்களில் இவன், இவன் என்று கூறுவது இவன் என்பது ஒருவன்தானு என்று வினவுகிறீர்களா? இல்லை! இல்லை! எண்ணற்ருேர்.

அந்தோ செய்தித்தாளில் காணும் சோகச் செய்தியை எண்ணும் போதும், வாய்விட்டுப் படிக்கும் போதும் கண்ணீர் மல்குகிறது. களம்நோக்கி ஓடுவோம் என்ற எண்ணம் எழும்பிக் குதிக்கிறது.

அன்ருெருநாள் எதிரி மன்னன் குலோத்துங்கனைப் பகைத்தான்.

ஒலி, ஒலி பேரொலி.

ஆம்சங்குகள்ஒலித்தன. முரசுகள் முழங்கின—போர்ப்பறைகள் இரட்டித்தன—ஊது சொம்புகள் உலகம் செவிடுபட ஒலித்தன. சிரிப்பொலி கேட்டு அனைவரும் நடுங்க, இடியோசைபோல் யானைகள் பிளிற, காடுகளும், மலைகளும் நிலைகுலைந்து வீழ, நான்கு திக்கிலுள்ளோர்நடுங்க—கடல்கள் எழும் ஒலிகளை அடக்க—புழுதிக் கூட்டங்கள் மேக மண்டலத்தைமுட்ட கடலில் மடங்கி விழும் அலைகள்போல் நுரைகள் சிந்த குதிரைகள் செல்ல, கரிய மேகக் கூட்டத்தைப்போன்று யானைப்படைகள் செல்ல; தொடங்குங்கள்! தொடங்குங்கள்! தொடங்குங்கள்! போரை என்று ஆர்ப்பரிக்க ஏவுங்கள்! ஏவுங்கள்! ஏவுங்கள்! குதிரைப்படையை. விடுங்கள்! விடுங்கள்! விடுங்கள்! யானைப் படையை என்ற ஓசைமிகுதிப்பட போரில் புறங்கொடாத வீரர்கள் முகத்திலும், மார்பிலும்பட்ட விழுப் புண்களைத் தாங்கி வானுலகும், மண்ணுலகும் எளிதில் கிடைப்ப தாயினும் முன்வைத்த காலை பின் வைக்காது நிலையில்லா உயிரை தாங்கி நிற்பது. நமக்கு ஒரு சுமையெனக்கருதி உயிரைக் கொடுத்தாவது நிலையானப் புகழைத்தேட ஒருவர்க்கொருவர் பின்வாங்குபவர் அல்லர் என்று சொல்லும்படியாக படைகள் நெருங்கிச் சென்றமையால் வேல், வாள் முதலிய போர்க்கருவிகள் ஒன்ருேடொன்று மோதி தீப்பொறிகள் சொரிய 'கலகல' என்னும் ஓசை உண்டாயிற்று.

ஐயகோ!

யானைக் கூட்டங்கள் கூட்டம் கூட்டமாக உயிர் துறந்து கிடக்கின்றனவே. வீரர்கள் வெட்டுண்டு குற்றுயிருய் கிடக்கின்றனரே. இரத்த வெள்ளஅலை எண்டிடை

மலைவரை பரவுதே—காகமும், கழுகும், நரியும் போர்க்களத்தில் கிடக்கும் பிணங்களைத் தின்கின்றனவே. ஆம் வெட்டுண்ட வீரர்கள் உடலிலிருந்து உயிர் நீங்கும் துன்ப ஒலியும், கழுகுகள் கத்தும் ஒலியும், காகங்கள் கரையும் ஒலியும், நரிகள் ஊளையிடும் ஒலியும், போர் வீரர்களின் ஆரவார ஒலியும் பேரொலியாக ஒலித்தது.

குலோத்துங்கன் யானை மீது இருந்து வில் வளைத்து போரிட்டான் எதிரியின்படை மலைபோல் கொன்று குவிக்கப்பட்டன. எதிரி எதிர்நிற்க முடியாமல் மலைகளில் ஏறி கால்கள் சிவக்க ஓடினான். ஒளிந்தான். சோழ வீரர்கள் விட்டபாடில்லை விரட்டினர்! பிடித்தனர்! யானையை விட்டிறங்கி சித்திர மண்டபத்தே அமைச்சர்கள் முடிவைத்து வணங்கி சுற்றிலும் வீற்றிருக்க வானவர் தலைவன்போல சிங்காதனத்தில் அமர்ந்திருந்த சோழ அரசனிடம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். தோற்ற மன்னர்கள் பயந்து களத்திலே போட்டு ஓடிச்சென்ற குடை சாமரை கொண்டு குலோத்துங்கனுக்குக் குற்றேவல் புரிந்தனர்.

இத்தகைய கலிங்கத்துப் பரணி காட்சிகள் நமக்குப் புத்துணர்ச்சி ஊட்டிப் புறப்படுங்கள் போருக்கு என்று தூண்டுகின்றன.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்” என்ற வள்ளுவன் வாக்கிற்கொப்ப; பண்டித நேரு தேசப் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றதும் வெற்றிச் செய்தியைக் கேட்டு சிறிது மன ஆறுதல் அடைகின்றோம்.

நல்ல நேரத்தில் நமது படை முன்னேற வாய்ப்பும் வசதியும் நமக்கு வந்து குவிகின்றன. அமெரிக்காவும், இங்கிலாந்தும் இன்னபிற பல நாடுகளும் நமக்கு உதவிபுரிகின்றன.

இப்படிப்பட்ட நல்லதொரு சமயத்தில் “வீடு இருந்தால்தானே ஓடு மாற்ற முடியும்” என்று நம் வீரர் பட்டாளங்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் விடுத்த செய்தியை நாட்டமுடன் ஏற்று வீட்டினைக் காத்தவர்களாவோம் — நாட்டினைக் காத்தவர்களாவோம் — நம் எல்லையைக் காத்தவர்களாவோம். இப்படிப்பட்ட நல்லதொரு நேரத்தில் இறந்தவர்களைப் போற்றி—இருப்போரைத் தேற்றி நம் இந்தியப் படைகள் தீரத்துடன் போரிட, வீரத்துடன் வெற்றி முரசு கொட்ட நம்மாலான பொன்னும் பொருளும் கொடுப்பதோடு; இரத்த தானமும் அளித்து நம் எல்லையைக் காத்து — நம் நாட்டை மீட்டுவோம் என்று சூளுரைத்துக் கொள்வோமாக. O

தலை வணங்கினான்!

[சுரா]

மன்னாதி மன்னர்களெல்லாம் மண்டியிட்டு ‘அந்த மாவீரன்’ புகழ்பாடிக்கிடந்தநேரம்!

உலகே அந்தக் கர்மவீரனின் வீரக் காதையை படித்துக்கிடந்த காலம்.

ஐரோப்பா கண்டத்தை ஆட்டி வைத்த அதிபதி! போர் வெறியன் புவியாளும் வெறிகொண்டவன்; நெப்போலியன்!

இவன் போர்க்களம் புகுந்துவிட்டால் புலியென எதிரியைச் சாடுவான் பின் எதிரியின் நாடு இவன் காலடிக்கு மிதியடியாகும்.

எவருக்கும் தலைவணங்காதவன்; எத்தகைய எதிர்ப்பை கண்டும் எள்ளளவும் பின் வாங்காதவன். இப்படிபட்டவன்தான் கண்களால் தூணுதற்கே அருவருப்பை தரக் கூடிய நிலையிலுள்ள ஓர் ஏழைக்கு சிரம் தாழ்த்தினான். வியப்பிலும் வியப்பு!

ஓர் நாள்: நெப்போலியனின் அலுவலகத்திற்க்கு கிழிந்து அழுக்கேறிய ஆடைபூண்டு மெலிந்த உருவமுடைய ஓர் ஏழை இளைஞன் வந்தான். வந்தவன் அங்கு பணி செய்துகொண்டிருந்தவர்களிடம் நெப்போலியனை காணவேண்டுமென்று சற்று பயபக்திகாட்டாமல் சாதாரணமான முறையில் கூறினான். இவனையும் இவன் வார்த்தைகளை செவியில் கேட்டவர்கள் ஆச்சிரிய குறியை முகத்தில் தேக்கியவர்களாக ஏறயிறங்க பார்த்தார்கள். பார்த்தவர்கள் அலட்சியமான சிரிப்பைச் சிந்தினார்கள்.

பின் ஏழை இளைஞன் அறிமுகச் சீட்டு நெப்போலியனிடம் கொண்டு போகப்பட்டது. உத்திரவு பிறந்தது—ஏழை; காவலரின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

ஏழையை கண்டதும் நெப்போலியன் மிக்க மரியாதையோடு எழுந்து தன்னெதிரிலுள்ள அரியாசனத்தில் அமரும்படி கூறினான். நேருக்கு நேர்—அமர்ந்த நிலையில் எந்தவித மாற்றமின்றி இருவரும் நீண்டநேரம் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தனர்.

அந்த அறிமுகச் சீட்டில் “ஓவியக் கலையில் பயிற்சிபெற்ற அந்தக் கலைஞன் — ஓர் ஏழை ஓவியன்” என்று குறிப்பிட்டிருந்தது. உரை முடித்து விடைபெற ஆசனம் விட்டெழுந்தான் அந்த ஏழை, மாவீரனும் மரியாதையோடு தானுமெழுந்து வெளிவாசல்வரை வந்து கலைஞனை வழியனுப்பிவிட்டு திரும்பி வந்தான்.

விழிகாண மறுக்கும் நிலையோடு, எளிமை தோற்றத்தோடு வந்த அந்த ஏழை இளைஞனிடம் உரை நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது அவனிடமிருந்து வெளிப்பட்ட ஆழ்ந்த அறிவு, செறிந்த கருத்து, தன்னடக்கமான பேச்சு, முதிர்ந்த கலைத்திறனின் போக்கு இவைகளை எண்ணி வியந்து மகிழ்ந்தவனாய் தன் தனியறைக்குள் சென்றான்.

எப்பேற்பட்டபேரரசர்களெல்லாம் —அவனைக்காணவந்த நேரத்தில் கூட ஆசனத்தைவிட்டெழுந்து மரியாதை காட்டாத வீரப் பேரரசன் சாதாரண ஏழைக்கு தனிமரியாதையும் மதிப்பும் தந்தான். காரணம் “கலை”மீது அவ்வளவு பற்றும் பாசத்தையும், நேசத்தையும், மரியாதையும் பூண்டிருந்தான் அந்தத் தலைவணங்கா மாவீரன் நெப்போலியன்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 1[illegible] இல்லம்... 11[illegible]

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.